# முத்தமிழ் விழா-1993



கலாசாரப் பேரவை

மண்முனை வடக்கு பிரதேச செயலகம், மட்டக்களப்பு.

## மக்கள் வங்கி

**உங்கள் சேமிப்புப் பணத்திற்கு 100% உத்தரவாதம் தருவது**

**மக்கள் வங்கி**

**மக்கள் வங்கியில் சேமியுங்கள் — மனநிறைவான வட்டியினைப் பெற்றுக்கொள்ளுங்கள்.**

- *உங்கள் செல்வச் சிறார்களின் எதிர்கால நல்வாழ்விற்கு எமது சிறுவர் சேமிப்புத் திட்டத்தில் சேமியுங்கள் - வட்டியினை அள்ளித் தந்து வாழ வைப்பது மக்கள் வங்கி.*

- *நீங்கள் பெற்ற செல்வத்தினை சீராகச் சேமிக்க எமது நிலையான சேமிப்புத் திட்டத்தில் சேமித்து சிறப்பான வட்டி வீதத்தினைப் பெற்றுக்கொள்ளுங்கள்.*

- *மக்கள் வங்கியின் சேமிப்புச் சான்றிதழ் திட்டத்தில் சேமியுங்கள். சேமிப்பு சான்றிதழ் திட்டத்தில் சேமிக்கத் தொடங்கும்போதே சேமிக்கும் காலத்திற்கான வட்டியினை முற்கூட்டியே வழங்குகின்றது மக்கள் வங்கி. நீங்கள் சேமிக்க நினைக்கும் ரூபா 100/-, ரூபா 500/-, ரூபா 1000/-, ரூபா 5000/-, ரூபா 10,000/- அலகுகளில் எமது சகல கிளைகளிலும் சேமிப்பு சான்றிதழ்களைப் பெற்றிடலாம்.*

- *முதலீட்டுச் சேமிப்புக் கணக்கொன்றில் சேமிப்பதுடன் சிறந்த வீட்டுக் கடன் திட்டத்தின் நன்மைகளை அடையுங்கள்.*

- *மகளிர் நன்மைக்கென்றே எம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ள மக்கள் வங்கியின் 'வனிதா வாசனா றன்கினும்' கணக்கில் சேமிப்பதன் மூலம் பல தங்கப் பரிசில்களை வென்றிடுங்கள்.*

பல லட்சம் மக்களின் வங்கி மக்கள் வங்கி

## மக்கள் வங்கி

பிரதேச தலைமைக் காரியாலயம்,

மட்டக்களப்பு.

### கல்லடி - உப்போடை ஸ்ரீராமகிருஷ்ண மிஷன்
### சுவாமி ஜீவனானந்த அவர்களின்

# ஆசிச் செய்தி

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் ஓர் அங்கமாகிய கலாசாரப் பேரவையானது, எதிர்வரும் வைகாசி திங்களில் மாபெரும் கலாசார விழாவொன்றினை நடாத்துவதற்கு திட்டமிட்டு வேண்டிய ஒழுங்குகளைச் செய்துவருவதுபற்றியும், விழாவின் ஓர் அம்சமாக கலை மணங் கமழும் சிறப்புமலர் ஒன்று மலரவிருப்பதுபற்றியும் அறிந்து மகிழ்ச்சியடைகின்றோம்.

தனக்கென உரிய சீரிய கலாசார பாரம்பரியமொன்றினை வாழையடி வாழையாக வளர்த்துக்கொண்டுவரும் பெருமை மட்டக்களப்பிற்கு உண்டு. இப்பாரம் பரியத்தைப் பேணிக்காத்து ஊக்குவிக்கும் பணியினை மேற்கொண்டு வரும் மட்டக்களப்பு மண்முனை-வடக்கு பிரதேச கலாசார பேரவையினரை நாம் வாழ்த்துகின்றோம். இப்பேரவை ஆண்டுதோறும் நன்கு திட்டமிடப்பட்ட கலை கலாசார நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்து கலைஞர்களை ஊக்குவிக்கும் பாரம்பரியமொன்றினை தமக்கென உண்டாக்கிக் கொள்ளட்டும்.

நிகழவிருக்கும் இப்பெருவிழாவில் பங்குகொள்ளும் கலைஞர்களுக்கும், விழா சிறப்பாக அமையவேண்டு.மெனும் பேரெண்ணத்துடன் உழைத்துவரும் பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகத்தர், உதவியாளர்கள், தொண்டர்கள் அனைவருக்கும் எம்பிரானின் பேரருள் சகல வகையிலும் உரித்தாகட்டும்.

சுவாமி ஜீவனானந்த

திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர்

## அருட்திரு யோசப் இங்ஸ்லி சுவாம்பிள்ளை

அவர்களின்

# ஆசிச்செய்தி

மண்முனை வடக்குப் பிரதேச கலாசாரப் பேரவை வெளியிடும் சிறப்பு மலருக்கு எனது ஆசிச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மனித வாழ்வின் முக்கிய கூறுகளாக மொழி, சமயம், கலை, கலாசாரம், பண்பாடு போன்றவை உள்ளன. இவற்றின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் மனித வாழ்வின் வளர்ச்சியை, நாகரீகச் சிறப்பைக் கண்டு கொள்ளலாம்,

மொழி, சமய, கலாசார உறவுகள் பிரிக்கமுடியாத அளவிற்கு இறுக்கமும் தொடர்பும் உடையவை. இவை ஒன்றை ஒன்று தழுவி வளர்ந்து வந்துள்ளதை தமிழர் வரலாற்றில் காணலாம். பிற இன சமூகங்களுக்கும் இது பொருந்துவதாகும். உண்மையில் சொல்லப்போனால் மனித வாழ்வை மேம்படுத்துவதே இவற்றின் முதல் நோக்கம். இம் மேம்பாடு ஒற்றுமை. சமாதானம், அமைதி, சமத்துவம் போன்ற சமூக விழுமியங்களை வளர்த்தெடுப்பதில் தங்கி உள்ளது. இவ்வகையில் சமயம் மொழி, கலை, கலாசாரம் போன்றவை சமூக வளர்ச்சியில் இன்றியமையாத பங்கை வகிக்கின்றன.

கலாசார விழாக்கள் சமூக மதிப்பீடுகளை வளர்ப்பதோடு உள்ளங்களுக்கு கிளர்ச்சியைத் தூண்டி உற்சாகப்படுத்த வல்லன. இன்று வேறுபட்டு பிளவுண்டு கிடக்கும் சமூகங்களை ஒன்றிணைப்பதாக, உற்சாகப் படுத்துவதாக கலாசார விழாக்கள் அமையவேண்டும். பிரதேச கலாசாரப் பேரவையும் இவ்விழாவின் மூலம் நல்லதொரு பயனை ஏற்படுத்தும் என நம்புகிறேன்.

இன்றைய சூழ் நிலையில் இத்தகைய விழா ஒன்றை ஏற்பாடு செய்து நடத்துபவர்களை பாராட்டுகிறேன். இவ்விழா இனிதே நடைபெறவும், அனைவருக்கும் நற்பயன் தரவும் இறை ஆசீர் இறைஞ்சுகிறேன்:

யோ. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை
ஆயர்

மட்டக்களப்பு ஜாமிஉஸ்ஸலாம் ஜும்ஆப் பள்ளிவாயல் 'கதீப்'

# அல்ஹாஜ் மௌலவி எம். எச். எம். புஹாரி (பலாஹீ)

அ வ ர் க ளி ன்

# ஆசிச்செய்தி

மண்முனை வடக்கு கலாசார பேரவை நடத்தும் கலாசார விழா தொடர்பான சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டிலா மகிழ் வடைகின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களும், முஸ்லிம்களும் பன்னெடுங் காலமாக இணைந்து வாழ்கின்றனர். இரு சமூகத்தாரும் தத்தமது கலை, கலாசாரங்களைப் பேணி வாழ்ந்து வருவதுடன், மற்றவர்களது கலைத்துறைப் பணிகளையும் மதித்தும், நேசித்தும் வருகின்றனர்.

முஸ்லிம்கள் தமிழ் மொழியை இனிமையாகப் பேசி, அம்மொழியிலேயே தமது கலை ஆக்கங்களைப் படைத்தும், கலாசாரத்தை வளர்த்தும் வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இம்மாவட்டத்தில் தமிழ் - முஸ்லிம் நல்லுறவை வளர்க்க கலை ஒரு பாலமாக அமைந்திருக்கிறது. இந்நல்லுறவு தொடர்ந்தும் பேணப்படுவதற்கு எல்லோரும் முயற்சி செய்யவேண்டும்.

மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை தனது செயற்பாடுகளில் எல்லா சமயத்தவர்களுக்கும் இடங்கொடுத்து தமிழ் மொழியையும், கலாசாரத்தையும் வளர்த்து வருவது பாராட்டுக்குரியது.

மேற்படி கலாசாரப் பேரவை நடத்தும் கலாசாரப் பெருவிழா இனிதே நிறைவுற எனது நல்லாசிகளை வழங்குகிறேன்.

எல்லாரும் இன்புற்றிருக்க இறைவன் அருள்வானாக!

ந ன் றி .

மௌலவி எம். எச். எம். புஹாரி

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர்

## லெப்.ஜெனரல்.ஜி.டி.ஜி.என்.செனவிரத்ன

அவர்களின்

# ஆசிச்செய்தி

இவ்வருடம் மே மாதம் 29ம்,30ம் திகதிகளில் மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை நடாத்தும் கலாசார விழா தொடர்பாக வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு இவ்வாசிச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஒரு சமுதாயத்தின் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் வெளிப்படுத்துவது கலாசார விழாக்களாகும். அத்தோடு பாரம்பரிய கலைகளையும் கலாசார மரபுகளையும் தொடர்ந்து பின்பற்றவும், அவற்றை வளர்க்கவும் இத்தகைய விழாக்கள் பேருதவியாகவும், தூண்டுதலாகவும் அமைகின்றன.

இவ் விழாவின் ஏற்பாட்டாளர்களைப் பாராட்டுவதோடு இவ்விழா சிறப்பாகவும், பயனுள்ளதாகவும் அமைய எனது மனமுவந்த நல்லாசிகள்.

லெப். ஜெனரல். ஜி. எம். செனவிரத்ன வி. எல். வி

ஆளுநர் வடக்கு - கிழக்கு மாகாணம்.

வடக்கு - கிழக்கு மாகாணசபை பிரதம செயலாளர்

## திரு. சொ. கணேசநாதன் அவர்களின்

# ஆசியுரை

மட்டக்களப்பு மாவட்டம் தனித்துவமான கலை, கலாசார விழுமியங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது. அவற்றிற்கு புதுமெருகும், ஊக்கமும், உற்சாகமும் இத்தகைய விழாக்கள் மூலம் வழங்க முடியும்.

மண்முனை வடக்குப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையினர் ஏனைய செயலகங்களுக்கு முன்னோடியாக இரு நாள் முத்தமிழ் விழாவை நடாத்துவதையிட்டு உளமார வாழ்த்துகிறேன். பாராட்டுகிறேன்.

இரு தசாப்தங்களாக தமிழிலான கலை, இலக்கிய வெளிப்பாடுகளில் ஒரு வகை தேக்கநிலை காணப்படுகிறது. இதனைப் போக்க கலை, இலக்கிய ஆர்வலர்கள் அயரா முயற்சியெடுக்க வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பாரம்பரியக் கலைகளான நாட்டுக் கூத்து, கும்மி, வசந்தன் போன்றவை அருகிவரும் நிலை காணப்படுகிறது. எனவே மண்முனை வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையினர் கலைகளைப் பேண நடவடிக்கைகள் மேற்கொள்ளுமென நம்புகிறேன்.

விழாவிற்கும், மலர் வெளியீட்டிற்கும் பின்னணியில் நின்று உழைத்த அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் உங்கள் முயற்சி வெற்றி பெற வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**சொ. கணேசநாதன்**
பிரதம செயலாளர்.

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி, கலாசார, விளையாட்டு அமைச்சின் செயலாளர்

எம். ஏ. சீ. முகைதீன் அவர்களின்

# ஆசிச்செய்தி

மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தினால் முதல் முறையாகக் கொண்டாடப்படவுள்ள முத்தமிழ் விழா மிகச்சிறப்பானமுறையில்நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிந்து பெருமகிழ்வடைகின்றேன். கலாசார பேரவை ஆரம்பிக்கப்பட்ட முதலாண்டிலே இவ்வாறான பெருவிழாவொன்றினை எடுப்பதற்கு கலாசார பேரவை முன்வந்திருப்பது பாராட்டப்படக்கூடியதொன்றாகும். மண்முனை வடக்கு பிரதேசம் கலைகள் நிறைந்த ஒரு பிரதேசமாகும். நாட்டுக்கூத்து, வசந்தன், கொம்புவிளையாடல், கரகம், கும்மி, காவடி, குரவை போன்ற பாரம்பரிய கலைகள் பேணப்பட்டு வளர்க்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு செயற்பட்டுவரும் தங்கள் கலாசார சபையினை வாழ்த்துவதோடு; கலைவிழாவோடு தொடர்பாக சிறப்பு மலரொன்றினையும் வெளியிட தாங்கள் முன்வந்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதொன்றாகும்.

தங்களுடைய பிரதேச செயலகத்தினால், கலை, இலக்கியம், நாடகம் ஆகிய துறைகளில் ஈடுபாடும், ஆற்றலும், அனுபவமும் உள்ள அறிஞர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள கலாசார பேரவை எதிர்வரும் காலங்களிலும் மக்கள் மத்தியிலே மறைந்து கிடக்கும் அரும் கலைப்பொக்கிசங்களை வெளி உலகிற்கு கொணர்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதே எனது பெருவிருப்பாகும். தாங்கள் கொண்டாடவுள்ள கலைவிழாவோடு தொடர்பாக வெளியிடவுள்ள சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி அனுப்புவதில் பேருவகை அடைகின்றேன்.

எம். ஏ. சீ. முகைதீன்
செயலாளர்.

மண்முனை வடக்கு கலாசாரப் பேரவைத் தலைவர்

## திரு. அ. கி. பத்மநாதன் அவர்களின்

(பிரதேச செயலாளர்)

# ஆசிச்செய்தி

நிர்வாகத்தை மக்கள் அண்டை கொண்டு செல்லும் அரசாங்கத்தின் நிர்வாகப் பரவலாக்க கொள்கைக்கமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒரேயொரு பிரதேச செயலகப் பிரிவின், பிரதேச கலாசார பேரவையினால் அதன் கன்னி முயற்சியாக நடாத்தப்படவுள்ள முத்தமிழ் விழாவையிட்டு வெளிவரும் முத்தமிழ் விழா சிறப்பு மலர் இதுவாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்திலே கிராமிய கலாசாரமும், தமிழ்ப் பண்பும், கிராமியக் கலையும் சுடரொளிவிட்டு பிரகாசிக்கும் பகுதிகளில் மண்முனை வடக்கு ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஆகவே அப்பெரும் பண்பையும், கலையையும் பேணிப்பாதுகாத்து வளர்ப்பது இப்பகுதி மக்கள் கொண்டுள்ள ஆர்வத்திற்கும். இம்முயற்சி ஒரு எடுத்துக்காட்டாக அமைகின்றது. 'கலை என்பது மனிதகுலத்தின் ஒரு நிலையான பெரும் நிதியாகும்' அது மனிதன் தோன்றிய காலத்திலிருந்து மனித உணர்வோடு கலந்து, மனித சமுதாயத்தின் மேம்பாட்டினை உணர்த்தும் ஒன்றாக உள்ளது, உணர்ச்சி மிக்க கலைஞர்களின் உழைப்பினால் அது உயர்ச்சிபெறுகிறது. கலைச்செல்வமானது, கலைஞர்கள், ரசிகர்கள் ஆகியோரின் மன எண்ணங்களை ஒன்றுபடுத்தி இன - மொழி போன்ற வேறுபாடுகளை மறக்கச் செய்கின்றன. கலை ஒரு நாட்டினதும், ஒரு சமூகத்தாரினதும், தனித்துவத்தை எடுத்துக்காட்டும் கருவியாக அமைகின்றது. ஆகவே இந்த பண்புமிக்க கலைச் செல்வம் அற்புதமானது. அதைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பது நம் யாவரின் கடமையாகும்.

இதுபோன்ற முத்தமிழ் விழாக்கள் இப்பிரிவிலுள்ள கலைஞர்களின் உள்ளத்தே மறைந்து கிடக்கின்ற கலைத்திறமையை வெளிப்படுத்துவதற்கு நல்ல சந்தர்ப்பம் அளிக்கக்கூடியவையாக அமைகின்றது. அவர்களிடையே உள்ள கலைத்திறனை வெளிப்படச் செய்யும் அதே வேளையில், கலைப் பண்பினைப் பாதுகாக்கவேண்டும் என்ற விழிப்புணர்ச்சியையும் உருவாக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இதுபோன்ற முத்தமிழ் விழாக்கள் ஆண்டுதோறும் இடம் பெறவேண்டும். தமிழ்ப்பண்பாடு பற்றிப்படர இவ்வாண்டுக் கலைவிழா துணைபுரியும் என்ற என் நம்பிக்கையும், நல் ஆசியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாண்டு முத்தமிழ் விழாவைச் சிறப்புற நடாத்துவதற்கு உதவி செய்த இப்பிரிவு கலாசாரப்பேரவை உறுப்பினர்க்கும், இந்தச் சிறப்பு மலரை வெளியிட விளம்பரங்களைத் தந்துதவிய வர்த்தக ஸ்தாபனங்களுக்கும், கவிதை, கட்டுரைகளைத் தந்துதவிய எழுத்தாளர்களுக்கும், வேறு பலவகையில் எனக்கு ஒத்தாசை நல்கிய எல்லோர்க்கும் எனமு மனமுவந்த நன்றியைக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

அ. கி. பத்மநாதன்.

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக
கலாசாரப் பேரவை நடாத்தும்

# முத்தமிழ் விழா!

இலக்கிய விழா:- 5 - 6 - 93 சனி மு. ப. 9-30

இடம்:- வில்லியம் ஓல்ற் மண்டபம், மட்டக்களப்பு.

தலைமை:- **திரு. அ. கி. பத்மநாதன்**
(பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவை தலைவரும்)

**நிகழ்வுகள்**

- மங்கல விளக்கேற்றல்
- தமிழ் வாழ்த்து
- வரவேற்புரை:- **திரு. எம். உதயகுமார்** (உதவி பிரதேச செயலாளர்)
- தலைமையுரை:- **திரு. அ. கி. பத்மநாதன்** (பிரதேச செயலாளர்)
- கருத்தரங்கு:- ''நவீன இலக்கியத்தில் மட்டக்களப்பின் பங்கு''
  **திரு. செ. யோகராசா** (விரிவுரையாளர் கிழக்குப் பல்கலைக் கழகம்)

  ''இலக்கியத்தில் பெண்கள்''
  **திருமதி. பாக்கியரெத்தினம்**

- கவியரங்கு:- ''சித்திரை சிரிப்பாளா...''
  தலைமை:- கவிஞர் **திமிலைத்துமிலன்**
  பங்குகொள்வோர்:- கவிஞர் **சிவானந்ததேவன்**, சாந்தி முகைதீன்
  **இந்திராணி புஸ்பராசா**, வெல்லவூர்க் கோபால்.

- பட்டிமன்றம்:- வாலிக்கு இராமன் செய்தது சரியா?
  தலைமை:- **திரு. க. தங்கவேல்** (அதிபர், மட்/ இந்துக் கல்லூரி)
  பங்குகொள்வோர்:- **திருமதி. சுபா சக்கரவர்த்தி**
  (உதவி கல்விப் பணிப்பாளர்)

  **திரு. க. தங்கத்துரை**
  (அதிபர், மகிழவட்டுவான் ம. வி)

  **திரு. எம். இராசரத்தினம்**
  (அதிபர், குறிஞ்சாமுனை ம. வித்தியாலயம்)

  **செல்வி. சுகந்தி சுப்பிரமணியம்**
  (ஆசிரியை, மட்/இந்துக் கல்லூரி)

- நன்றியுரை:- **திருமதி. வாசுகி அருள்ராசா**

கலைவிழா:- 6 - 6 93 (ஞாயிறு) பி. ப. 3 மணி
கல்லடி விபுலாநந்த **அடிகள் இசை** நடனக் கல்லூரி

தலைமை:- **திரு. அ. கி பத்மநாதன்**

பிரதம அதிதி:- **திரு. சி. நடராசா** (பதிவாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்)

**நிகழ்வுகள்:-**

- மங்கல விளக்கேற்றல்
- தமிழ் வாழ்த்து
- வரவேற்புரை:- **திருமதி. வாசுகி அருள்ராசா**
- தலைமையுரை:- **திரு. அ. கி. பத்மநாதன்**
- முத்தமிழ் விழா சிறப்புமலர் வெளியீடு
  முதல் பிரதி பெறுபவர்:- **சுவாமி ஜீவனானந்தஜீ**
  (இராமகிருஷ்ண மிஷன்)
- வெளியீட்டுரை:- **திரு. அ. இருதயநாதன்**
- கலைஞர் கௌரவம்
  தமிழ்மணி **செ. குணரத்தினம்**
  தமிழ்மணி **ரீ. பாக்கியநாயகம்**
  கவிஞர் **திமிலை மகாலிங்கம்**
  அருட்கலைத்திலகம் **மாஸ்டர் சிவலிங்கம்**
- பிரதம அதிதி உரை:- **திரு. சி. நாடராசா** (பதிவாளர், கிழக்குப் பல்கலைக் கழகம்)
- கலை நிகழ்ச்சிகள்:-
- பாடல்: கல்லடி, உப்போடை சிவானந்தா வித்தியாலய மாணவர்
  குழுநடனம்:- கல்லடி, உப்போடை விவேகானந்தா மகளிர் மகாவித்தியாலய மாணவிகள்

  ஒற்றுமையே நபிவழி:- பாடல் தயாரிப்பு **ஜனாபா உம்முஹபீபா**

  நாடகம்:- ''தந்தை சொல்மிக்க மந்திரமில்லை''
  மட்/வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலை
  தாரிப்பு: **திரு வெ. தவராசா**

  செம்பு நடனம்:- கல்லடி-உப்போடை விவேகானந்தா மகளிர் மகாவித்தியாலம்

  வில்லிசை:- மட்/இந்துக்கல்லூரி மாணவர்

  நாடகம்:- ''மறச்செவி'' மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரி

  நடனம்:- **செல்வன். மு. சதீஸ்குமார், செல்வி. ஏ. ஜே. சுத்மிலதா**
  மட்/இந்துக் கல்லூரி
- பரிசளிப்பு:-
- வடமோடி நாடகம்:- ''குருக்கேத்திரன் அபயம்''
  மட்/சிவானந்தா வித்தியாலயம்
  **தயாரிப்பு: திரு. கந்தசாமி**
- நன்றியுரை:- திரு. **மா. உதயகுமார்** (உதவி பிரதேச செயலாளர்)

# உள்ளே உள்ளவை

1) மட்டக்களப்பின் மகிடி நாடகம் - ஓர் அறிமுகம்
காலநிதி. சி. மௌனகுரு — 01

2) மங்காத புகழ் பூக்கும் எங்கள் நாடு
கவிஞர் செ. குணரத்தினம் — 05

3) மட்டக்களப்பு பிரதேச சிறு சஞ்சிகைகள்
- ஒரு கண்ணோட்டம் செ. யோகராசா எம். ஏ. — 08

4) மட்டு மண்ணில் மஞ்சமிடு!
ரீ. எல். ஜவ்பர்கான் — 12

5) நாட்டார் சமயம் - ஓர் அறிமுகம்
க. யோகநாதன் பி. ஏ. — 13

6) வழி! வாசுதேவன் — 18

7) ஓடி விளையாடு பாப்பா
பேராசிரியர் ப. வே. இராமகிருஷ்ணன் — 19

8) மீன்பாடும் தேனாடு எங்கள் நாடே!
மட்டுநகர் முத்தழகு — 21

9) என்ன நடந்தது இங்கே ஏன் இந்த மாறுதல்கள்
திமிலை மகாலிங்கம் — 24

10) மட்டக்களப்பில் நவீன நாடகங்கள் - ஒரு நோக்கு
வெ. தவராஜா — 27

# மட்டக்களப்பின் மகிடி நாடகம் - ஓர் அறிமுகம்

கலாநிதி சி. மௌனகுரு

இலங்கையிலே தமிழர் பாரம்பரியமாக வாழ்கின்ற பிரதேசங்களுள் மட்டக்களப்புப் பிரதேசமும் ஒன்று. தனக்கெனத் தனித்துவமான சமூக அமைப்பினையும் பண்பாட்டம்சங்களையும் இது கொண்டுள்ளது. தமிழ் நாட்டிலிருந்து இது மிகத்தொலைவில் அமைந்திருப்பதும், ஆகம வழிபாட்டம்சங்கள் இங்கு அதிகளவு அறிமுகமாகாமலிருப்பதும் மிஷனறிமார்களின் ஆங்கிலக்கல்விமயமாக்கல் இங்கு அதிகளவு செயற்படாமையும், நவீனவர்க்கம் இங்கு பெரியளவில் உருவாகாமையும் இத்தனித்துவம் பேணப்படுவதற்கான காரணங்களாகும்.

ஓர் இனத்தின் புராதன பண்பாடுகளை அறிய விரும்பும் மானிடவியலாளர், அவ்வினத்தின் பின்தங்கிய பிரதேசங்களையும், புராதன மனிதக் குழுக்களையும் நாடுவர். இவ்வகையில் ஈழத் தமிழரின் புராதன பண்பாடுகளையும், தனித்துவம் மிக்க கலாசார அம்சங்களையும் ஆராய விரும்பும் ஆராய்வாளருக்கு மட்டக்களப்பு ஒரு முக்கிய களப் பிரதேசமாகும். தமிழர் வாழ்கின்ற வட பிரதேசம் வரலாற்றுப் போக்கில் பல்வேறு கலாசார மாற்றங்களுக்குட்பட்டு விட்டதனால் தமிழரின் புராதன பண்பாட்டம்சங்களை மூலவடிவில் இங்கு காண்பது மிக அருந்தலாக உள்ளது. இந்நிலையில் மட்டக்களப்புப் பிரதேசம் தமிழர் கலாசார ஆய்விற்குரிய பிரதேசமாக மாறுதல் இயல்பே.

## மகிடி நாடகம்

இப்பகுதியின் பண்பாட்டம்சங்களாகத் திகழ்வனவற்றுள் முக்கிய கவனம் பெறவேண்டியவை இப்பகுதியில் நிலவும் மரபுவழி நாடகங்களாகும். மட்டக்களப்பின் வடமோடி, தென்மோடி, வசந்தன் நாடகங்கள் பற்றி அறிஞர்களும் ஆர்வலர்களும் நிறைய எழுதியுள்ளனர். அவை மட்டக்களப்புக்கு வெளியே பிரபல்யமாகியுள்ளன. ஆனால் இதுவரை அறிஞர்களால் அறிமுகப்படுத்தப்படாமலும் இன்றும் அருந்தலாக வழக்கில் இருப்பதுமான ஒரு நாடகம் மட்டக்களப்பில் உண்டு. அதுவே மகிடி நாடகமாகும். இதனை இப்பிரதேச மக்கள் மகிடிக்கூத்து என்றும் அழைப்பர். இந்நாடகம் சமயச்சடங்குகளினின்று விடுபட்டதும் அதேநேரம் மட்டக்களப்பின் இந்து மத சமயச் சடங்குகளிற் பயன்படுத்தப்படும், வணக்கமுறைகள், கிரியை முறைகள், தாள வாத்தியங்கள் பயன்படுத்தப்படுவதுமான நாடகமாகும். இவ்வகையில் இது பெரு வளர்ச்சி பெற்ற வடமோடி, தென்மோடிக் கூத்துக்களுக்கு இடைப்பட்ட ஒரு நாடகவடிவம் எனலாம். இதேபோல் அமைந்த கோலம் சொக்கரி போன்ற நாடகங்கள் சிங்கள மக்கள் மத்தியில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மகிடி என்ற சொல்லுக்குப் பல கருத்துக்கள் உண்டு. மந்திர தந்திரங்களைக் காட்டும் விளையாட்டு என்ற ஒரு அர்த்தமும் அதற்கு

உண்டு. இம்மகிடிக்கூத்தில் பெரும் இடத்தைப்பிடிப்பது அதுவே.

மட்டக்களப்பு மந்திரத்துக்குப் பெயர் போனது என்ற ஓர் ஐதீகம் உண்டு. இங்கு முன்பிலிருந்து மந்திரவாதிகள் பற்றியும் அவர்களின் திறமைகள் பற்றியும் வாய்மொழிக் கதைகள் பல வழங்கியுள்ளன. எனவே அப்பிரதேசத்திற்குரிய நாடகம் இப்பண்புகளைக் கொண்டிருத்தல் இயல்பு. இவ்வகையில் மட்டக்களப்பின் புராதன பண்பாட்டின் ஓர் அம்சத்தைப் பிரதிபலிக்கும் நாடகம் இது எனலாம்.

## மூவகை மகிடிக்கூத்துக்கள்

இம் மகிடிக்கூத்து சித்திரை வருடப் பிறப்பன்றோ அல்லது வருடப்பிறப்பின் பின்னர் அதனை அண்மித்த நாளிலோ ஆடப்படுகிறது. மூன்று வகையான மகிடிக்கூத்துக்கள் மட்டக்களப்பில் வழக்கிலுள்ளன.

முதலாவது வகை மகிடிக்கூத்தில்மலையாள நாட்டிலிருந்து வரும் ஒண்டிப்புளியும் அவன் மனைவி காமாட்சியும் தமது கூட்டத்தாருடன் மட்டக்களப்புக்கு வந்து அங்கு வாழ்ந்த மந்திரவாதியுடன் போட்டியிட்டு வென்று அப்பிரதேசத்தில் குடியேறியமை நிகழ்த்திக் காட்டப்படுகிறது.

இரண்டாவதுவகைமகிடிச்கூத்தில் கதை அம்சம் அதிகம் இல்லை. மந்திரவேலைகள் நடைபெறுகின்ற மகிடியினை வேடன், வேடுவிச்சி வெள்ளைக்காரன்,வெள்ளைக்காரி ஆகியோர் பார்க்க வருவது இதில் நிகழ்த்திக் காட்டப்படுகிறது.

மூன்றாவது வகை மகிடிக்கூத்து முதலிரண்டு மகிடிக்கூத்துக்களையும் விட வித்தியாசமானது.இதிலும் மந்திர தந்திர விளையாட்டுக்கள் இருப்பினும் கம்ப காமாட்சி, மீனாட்சி,வசிட்டர் ஆகியோர் சம்பந்தமான கதையும் குற்றாலக் குறவஞ்சியின் சாயல் பொருந்திய கதையும் நிகழ்த்திக் காட்டப்படுகின்றது.

இம் மகிடிக்கூத்துக்கள் திறந்த வெளியில் பகல்வேளைகளில் நடைபெறுகின்றன. முதலிருவகை மகிடிக்கூத்துக்களும் ஏனைய நாடகங்களைப் போல ஒத்திகை பார்த்து,பழகி திட்டமிட்டு ஆடப்படுவது அன்று. இதற்கெனத் திட்டவட்டமான உரையாடல்கள் இல்லை. கர்ண பரம்பரைக்கதை ஒன்றினை நடிகர்கள் தம் திறமைக்கு ஏற்ப உரையாடி நிகழ்த்துவதே இங்கு பிரதானம். இவ்வகையில் இது புதிதளிக்கும் அரங்கு வகையானது. ஆடல் பாடல், உரையாடல் என்பன இதில் இடம் பெறும்.

## மேடை

வீதியோரங்களில் இதற்கென மேடையிடப்படும். இங்கு மேடை என்பதைப் பாரக்குமிடம் என்ற அர்த்தத்திலேயே கொள்ள வேண்டும், ஏனெனில் இம்மகிடி மேடைகள் உயரமானவையன்று-சமதள அளவில் அமைந்தவை. வெறும் தரையில் ஐம்பது யார் நீளம் பதினைந்து யார் அகலத்திற்குச் சுற்றிவரக் கம்புகளை பத்தடிக்கொன்றாக நாட்டி அவற்றைக் கயிற்றினால் இணைத்து நாடகம் ஆட ஆக்கப்பட்ட அரங்கே இந்நாடகம் நடைபெறும் மேடையாகும்.

இம் மேடையின் ஒரு பக்கம் கிடுகினால் (பின்னிய தென்னோலை) அடைக்கப்பட்டு அக்கிடுகு வேலியின் மறைவில் இருந்து மேடையில் இருக்கும் மேடைப் பொருள்களை இயக்க மந்திரத்தால் அவை அசைவது போலக்காட்டுவர். இம்மேடையில் மேடைப் பொருள்களாக பூரணகும்பம், கொடிமரம், வட்டாமடை, கொட்டில்கள், பந்தல்கள் என்பன இருக்கும். இம் மகிடிமேடையைச் சூழ நின்று கொண்டோ அல்லது அமர்ந்து கொண்டோ தமது வசதிக்கேற்ப அங்கு நடைபெறும் மகிடி நாடகத்தை பார்வையாளர் பார்த்து மகிழ்வர்.

## நடிகர் - பார்வையாளர் உறவு

முதலாவது மகிடிக்கூத்தில் மட்டக்களப்பாருக்கு வேடமிடுவோர், மேடையினுள் நாடகம் தொடங்கு முன்னர் வந்து தமக்குரிய கொட்டிலினுள் இருப்பர். மலையாளத்தாருக்கு வேடமிடுவோர் அயல் ஊரினின்று வேடமிட்டு வீதியால் ஆடிவந்து மேடைக்குள் இறங்கி, நாடகத்தை ஆரம்பித்து நடத்தி முடிப்பர். இந்த நாடகத்தின் போது பார்வை

யாளருடன் நடிகர் உரையாடுவர். அங்கு நடைபெறுவதைப் பார்வையாளருக்கு விளக்குவர், இவ்வண்ணம் நடிகர் - பார்வையாளர் இணைப்பில் இந்நாடகம் நடைபெறும்.

இரண்டாவது வகை மகிடிக்கூத்தின் மேடையமைப்பும் பெரும்பாலும் முன்னையதைப் போன்றதே, ஆனால் சிற்சில வேறுபாடுகள் உள. முன்னைய மகிடியில் நடிகர் ஒரு பக்கத்து வழியினால் மேடையினுள் நுழைய இதில் நடிகர் இரண்டு வழிகளினால் உள் நுழைவர், இது முழுக்க முழுக்க ஒரு வேடிக்கை நிகழ்ச்சியாகவே அமையும் சாம்பலாண்டி என்றழைக்கப்படுவோரும் அவரது உதவியாளரும் இதிற் பார்வையாளரை அமைதிப்படுத்தி, நடைபெறப்போகும் நாடகத்தை விளக்கி இதனை நடத்துவர். இடையிடையே விளக்கமளிப்பார், இவ்வகையில் இவர்கள் நவீன நாடக அரங்கின் எடுத்துரைஞர்களை ஒத்தவர்களாயுள்ளனர்.

## பழைமையும் கட்டுப்பாடும் இணைந்த வடிவு

மூன்றாவது வகை மகிடிக்கூத்தின் மேடையமைப்பு முதலிரு வகைகளை விட வித்தியாசமானது. முதல் இருவகை மகிடிக்கூத்தின் மேடை அமைப்புப்போல இது அமையினும் இம்மேடை இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒரு பகுதியில் மட்டக்களப்பின் தென்மோடி வடமோடிக் கூத்தாட்டங்களுக்கு அமைக்கப்படும் மேடைபோல ஒரு வட்ட மேடை (வட்டக் களரி) அமைக்கப்படும். அது இலைகளாலும் குருத்துக்களாலும் அலங்கரிக்கப்படும். மற்றப் பகுதி வழக்கமான மகிடி மேடைபோல அமைக்கப்படும். அங்கு கொடிமரமும், கும்பங்களும் மேடைப் பொருள்களாயிருக்கும். பாத்திரங்களின் தோற்றமும் வரவுத்தாளமும் தருவும் பாடலும் கூத்துப்போல வட்டக்களரியில் நடைபெறும். ஆட்டம் முடிய சம்பாஷணை மூலமாகக் கதையை நிகழ்த்த மற்ற அரங்கிற்குள் பாத்திரங்கள் வந்து விடுவர். எழுத்தில் ஏட்டிலுள்ள கதை வட்ட அரங்கினுள்ளும், ஏட்டில் இல்லாத கர்ண பரம்பரைக் கதை மற்ற அரங்கினுள்ளும் நடைபெறும்.

இவ்வகையில் இது ஒரு கட்டுப்பாடான நாடகமும், புராதன நாடகமும் இணைந்த ஒரு நாடக வடிவு எனலாம். இங்கும் வட்ட மேடை அல்லாத பகுதியில் நாடகம் நடைபெறும்போது பார்வையாளருடன் குறவன், குறத்தி, வேடன், வேடுவிச்சி ஆகியோர் உரையாடுவர். பார்வையாளர் நாடகத்திற் பங்கேற்றல் இங்கு இடம்பெறும், வட்டமான மேடைக்குள் தோன்றி ஆடும் பாத்திரங்களுக்குத் தாளக்கட்டும் ஆட்டமும் உண்டு. இவை வடமோடித் தாளக்கட்டுக்களாயுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆனால் வடமோடித் தாளக்கட்டுக்கள் இவற்றைவிடச் செம்மையும் முழுமையுமுடையவை.

## பொதுத்தன்மை

இம்மகிடிக்கூத்துக்கள் இடத்துக்கு இடம் வித்தியாசப்பட்டாலும் தமக்குள் ஒற்றுமையுடையனவாகவுள்ளன. இதில் இடம்பெறும் மந்திர தந்திரக்கதைகளும் மேடையமைப்பும் பார்வையாளர் பங்கேற்றலும்குறவன், குறத்தி முதலிய பாத்திரங்களும் இவற்றிற்கு ஒரு பொதுத் தன்மையைத் தருகின்றன. ஆனால் இவற்றினிடையே ஒரு வளர்ச்சிப் போக்கினையும் காணமுடிகிறது. கர்ண பரம்பரையாக வந்த ஒரு கதையை ஆரம்பத்தில் நிகழ்த்திக் காட்டத் தொடங்கிப் பின்னால் அதற்கென கதையமைப்பினையும் வட்ட மேடையினையும், ஆட்ட முறைகளையும், உள்ளடக்கிய வரலாறாக இதை நோக்கின் இதன் வளர்ச்சியைப் புரிந்து கொள்ளலாம்.

## இடம் பெயர்ந்த ஐதீகம்

இந்நாடகம் மட்டக்களப்பாரை மலையாளத்தார் வென்ற கதையைக் கூறுவதால் இதற்கு ஒரு சரித்திரப் பெறுமதியுண்டு. முதலாவது மகிடிக்கூத்தில் வந்து மட்டக்களப்பாரை வெற்றிகொள்ளும் குழுவின் தலைவன் ஒண்டிப்புலி என்பதும், மட்டக்களப்பின் தலைநகர் புளியன்தீவு என்பதும் கவனத்திற் கொள்ளத்தக்கவை. மட்டக்களப்புப் பண்பாட்டுக்கும் மலையாளப் பண்பாட்டுக்கும் நிறைந்த ஒற்றுமையுண்டு. மட்டக்களப்பிற் காணப்படும் பெண்தெய்வ வணக்கமுறை ஆகம முறையில்லாத கிரியைகள், தாய்வழியுரிமை, உறவு

முறைகள், பெயர்கள், பழக்க வழக்கங்கள் என்பன மலையாளத்திலும் காணப்படுபவை என்ற கருத்தும் உண்டு. எனவே மட்டக்களப்பில் குடியேறிய புராதன குழு ஒன்றினது கதையே மகிடியாகக் கர்ண பரம்பரையாக நடத்தப்படுகிறது என்று கொள்ளலும் பொருந்தும். இதனை மானுடவியலாளர் இடம் பெயர்ந்த ஐதீகம் எனவும் அழைப்பர். இவ்வகையில்மகிடிக் கூத்து நாடக நிலையில் மாத்திரமன்றி மானுடவியல், சமூகவியல் நிலையிலும் அணுகும் பெற்றியது.

## ஈழத்தமிழர் புராதன நாடகம்

ஈழத்துத் தமிழரின் புராதனமான நாடகவடிவம் மகிடிக்கூத்து எனலாம். அத்தோடு ஈழத்துத் தமிழரின் வீதி நாடகமும் இதுவே எனலாம், வீதி நாடகத்திற்கென்று சில முக்கிய பண்புகள் உள்ளன. பார்வையாளர் தமது வசதிக்கேற்ப இருந்தோ நின்றோ பார்த்தல், சுற்றிவரப் பார்வையாளர்கள் இருத்தல்; பார்வையாளர் நாடகத்திற் பங்கேற்றல். நடிகர்கள் பார்வையாளருடன் உரையாடல்,வீதியே மேடையாக அமைதல், காட்சிச் சோடனைகள் இன்மை, கற்பனைக்கு அதிக இடம், அதிகளவு ஆடை அலங்காரம் ஒப்பனை இன்மை,பகலில் நடைபெறுதல் என்பன வீதி நாடகத்தின் சில தன்மைகளாம். இவை மகிடியிற் காணப்படுகின்றன.

புகழ்பெற்ற வங்காள நாட்டுக்காரரான பாதல் சர்க்காரின் நாடகங்கள் வீதி நாடக வகையினவே. அவர் 'மூன்றாவது அரங்கு' என்ற ஒரு கோட்பாட்டினை நாடக உலகில் ஏற்படுத்தியுள்ளார். எளிமையான வசதி குறைந்த இந்திய கிராமிய பாட்டாளி மக்களுக்கு நாடகத்தின் இலக்கணம் குன்றா வகையில் வீதி நாடகப்பாணியில் நாடகத்தை அளித்தலே அது. மட்டக்களப்பில் மகிடி நாடகத்தின் சாரத்தினின்று நாமும் நமக்கென ஒரு மூன்றாவது அரங்கினை உருவாக்க முடியும்.

மட்டக்களப்பின் வடமோடி, தென்மோடி நாடகங்கள் வழக்கில் வந்த பின்னும் அதற்கு அரச அங்கீகாரமும், படித்தோர் அங்கீகாரமும் கிடைக்கத் தொடங்கிய பின்னர் மகிடி நாடகம் அருகத் தொடங்கியது. இன்று இதனை மிகக் குறைவாகவே ஆடுகின்றனர். இளம் தலைமுறையினர் இதில் ஈடுபடுவது குறைவு. மட்டக்களப்பை வெளியில் அறிமுகப் படுத்தும் தனித்துவம் வாய்ந்த கூத்துக்களையே கைவிடும் இன்றைய இளம் தலைமுறையினர் மகிடி நாடகத்தைக் கைவிடுவதிலும் ஆச்சரியம் இல்லை.

ஆனால் கலாசாரத் தனித்துவமும், தமிழர் தேசிய தனித்துவமும் பேசும் நாம் நமது அருகில் வாழும் சிங்களச் சகோதரர்களைத அவதானிக்க வேண்டும். அவர்கள் தமது புராதன நாடகங்களைப் பேணிப்பாதுகாக்கின்றார்கள், வளர்க்கின்றார்கள். அதன் மூலம் தமது தனித்துவங்களைப் பேணுகிறார்கள். அவர்களின் நாடகங்களான கோலம், சொக்கரி என்பன இவ்வகையிற் குறிப்பிடத்தக்கவை. எமது மகிடிக்கும் அவர்களது சொக்கரிக்கும் இடையே ஒற்றுமைகளுண்டு. தொலைக்காட்சியிலே இவற்றைச் செம்மைப் படுத்திக் காட்டுகின்றனர். பெருமையோடு அவற்றைத் தமது கலாசாரச் சின்னங்களாகக் காட்டுகின்றனர். தொலைக்காட்சியின் தமிழ்ப் பிரிவினரும் இவ்வகையிற் தமது கவனத்தைத் திருப்புதல் வேண்டும். கொழும்பு வாழ் தமிழ் மக்களின் உயர் கலாசாரத்தையே ஈழத்துத் தமிழ்க் கலாசாரமாகக் காட்டுவதைக் குறைத்து மண்ணிலிருந்து கிளைக்கும் தமிழ் மக்கள் கலைகளையும் காட்ட முயல வேண்டும். இவ்வகையில் மகிடிக்கூத்தும் கவனிப்பிற்குரிய ஒன்றாகும்.

இம்மகிடிநாடகம் யாழ்ப்பாணத்திலும் பண்டு இருந்ததென அறிய முடிகிறது. இந்நாடகம் மூதூர், வவுனியாப் பகுதிகளிலும் அத்தி பூத்தாற்போல நடை பெறுகின்றது என்ற தகவல்களும் கிடைத்துள்ளன. இவை ஆராயப்படவேண்டும்.இத்தகவல்கள் பொதுவாக இந்நாடகம் ஈழத்தமிழரின் புராதன நாடகம் என்பதைச் சுட்டி நிற்கின்றன.

மகிடிக்கூத்து பற்றிய ஆய்வும்,தேடலும், ஈழத்துத் தமிழரின் புரதான நாடகத்தையும், அதன் நாடக முறையும். எமது கலாசாரக் கூறுகளின் சில தனி அம்சங்களையும் காட்டும் இவ்வகையில் ஆய்வாளர்களும் அபிமானிகளும் முயல்வார்களாக.

# மங்காத புகழ் பூக்கும் எங்கள் நாடு!

கவிஞர் செ. குணரத்தினம்

சொட்டுகின்ற மலர்த்தேனை
சுவைத்தசிறு மணிவண்டு
மட்டக்களப்பென்னும்
மணியூரைக் கண்டுகவி
கட்டிவந்து பாடியதை
கேட்டுநான் வாங்கிவந்து
கொட்டியின்பப் பால்சேர்த்து
குழைத்திங்கு தருகின்றேன்!

'வெருகல்நதி' உச்சியாக
விரைந்தோடும் 'குமுக்கன்ஓயா'
திருப்பாதமாக நீண்டு
திக்கெட்டும் புகழ்பரப்பும்
திருமகளாம் எம் நாட்டின்
திறமைகளைப் பெருமைகளை
ஒருவண்டால் பாடுதற்கு
ஓரிருநாள் போதாதே!

படிக்காத பாமரரும்
பாடுகிறார் இங்குகவி!
குடித்துமிஞ்சிப் போனநறும்
கொப்புத்தேன் வாவிகளில்
வடிந்தோட, மீனினங்கள்
வட்டமிட்டு அதைக்குடித்து
படிக்கின்ற பாடல்கேட்டு
பாடஎன்னால் முடியாதே!

துள்ளுகின்ற கயல் காட்டும்
துடிக்கின்ற விழியார்கை
அள்ளிவைக்கும் கைக்குத்து
அரிசிச்சோற்றோடு தயிர்,
வெள்ளியெனக் கணையான்மீன்
வெட்டியாக்கி விருந்தளித்தால்
பள்ளிகொள்ள வைக்குமிதே
பாயிலொட்டும் மந்திரமாம்!

கண்ணகியின் சிலைகொணர்ந்த
கஜபாகு இன்றிருந்தால்
கண்ணகிக்குப் பலநூறு
கோவில் வைத்த எம் நாட்டை
மன்னனவன் பாராட்டி
மனமகிழ்ந்து வாரிவாரி
பொன்னள்ளிக் கொட்டியவன்
புதுமைபல செய்திருப்பான்!

வங்காள விரிகுடாவும்,
வளைந்தழகாய்க் கண்ணயரும்
தங்கநிற நெற்கதிர்கள்
தருகின்ற வயல் நிலமும்
மங்காத எழில் விரித்து
மலைப்பாம்பாய் நெளிகையிலே
பங்கயமும், பாத்திமாவும்
பாயிளைக்கப் பன்னெடுப்பார்!

முல்லையுடன் குறிஞ்சி நிலம்,
முத்தமிட்டு விளையாட
சொல்லரிய கவிவாணர்
செந்தமிழில் கவிபாட!
கல்லடியின் வாவிக்குள்
கவியரங்கு மீன் போட!
தில்லையனும் முஸ்தபாவும்
தோணியேறி இறால்பிடிப்பார்!

கூத்துகளும் குரவைகளும்
கொம்புமுறி விளையாட்டும்
பார்த்துப் பசியாறுதற்கு
பால்தயிரும், நெய்தேனும்
சேர்த்துவைத்துச் சிரிக்கின்ற
சிங்காரவல்லி யெங்கள்
பூத்தமலர் போலழகுப்
பொன்னாடு எங்கள் நாடு!

வித்தகராம் சுவாமியெங்கள்
விபுலாநந்தருடன்
முத்தமிழைக் காத்துநல்ல
முறையாகத் தமிழணங்கில்
பற்றுவைத்த புலவர்மணி
பெரியதம்பிப் பிள்ளையர்க்கு
சற்றும் இளைத்திடாத
சரிபுதீனும் வாழுமூராம்!

பச்சரிசி பயறுசீனி
பொங்கித் திரண்டதுபோல்
முச்சங்கம் வளர்த்ததமிழ்
மூன்றும் இணைந்ததுபோல்
பட்சமுடன் மூவினமும்
பழகி உறவாடுகின்ற
பச்சைப் பசேலழகுப்
பாய்விரிக்கும் எம் நாடாம்!

கல்லடி இசை நடனக்
கல்லூரி, கிழக்கிலங்கை
பல்கலைக் கழகம், நாளும்
பல்லினக் காகிதங்கள்
பண்ணிடும் வாழைச்சேனை
பகுதியில் அமைந்த ஆலை
மின்னிடும் எங்கள் நாட்டின்
மிகப்பெரும் சொத்தேயாகும்!

புயல் மழை வெள்ளம் போட்டும்
போர் வந்தும், எங்கள் நாட்டின்
இயற்கையின் எழிலைமாற்ற
எண்ணிய போதும் மட்டு
கயல்விழிக் கன்னி மேனி
காய்ந்ததேயில்லை, பாரில்
உயர்பெரும் வரம் படைத்த
ஒப்பிலாதெங்கள் நாடே!

# மட்டக்களப்பு பிரதேச சிறுசஞ்சிகைகள் - ஒரு கண்ணோட்டம்

செ. யோகராசா எம். ஏ.
விரிவுரையாளர் கிழக்கு ப. க. க.

**கா**த்திரமான கலை, இலக்கியப் படைப்புக்களைத் தருவதும் இளம் எழுத்தாளர்களை இனங்கண்டு வெளியுலகிற்குக் கொணர்வதுமான பணியைச் செய்வன சிறு சஞ்சிகைகளே; தமிழ் நாட்டில் மணிக்கொடி தொடக்கம் மீட்சி வரை, ஈழத்தில் மறுமலர்ச்சி தொடக்கம் அலை வரை இதற்கு விதி விலக்கல்ல. இவ்விதத்தில் மட்டக்களப்பு பிரதேசத்திலிருந்து தற்போது வெளிவரும் சிறுசஞ்சிகைகள் பற்றி அவதானிப்பது பொருத்தமானது. இங்கு, சென்ற வருடம் (1992) வெளிவந்த சஞ்சிகைகளே - கைக்கெட்டியவை மட்டும் - கவனத்திற்கெடுக்கப்படுகின்றன. அவை.

கிழக்கொளி:- கார்த். 91 - சித்தி 92 = வை, 92, ஐப், 92

மலரும் வாழ்வு:- இதழ் 12

தொண்டன்:- இதழ் 10 டிச, 91 - ஜனவரி92 = இதழ் 10 டிச:ஜன 92/93

காகிதமலர்:- 1992

கிழக்கொளி கிழக்குப் பல்கலைக் கழக ஊழியர் சங்க வெளியீடு; கலை இலக்கிய முத்திங்கள் ஏடு.(பிரதம ஆசிரியர் இரா.இராசேஸ்வரன்) ஆயினும், ஆறுமாத கால இடைவெளியில் வெளிவந்துள்ளது. (நிதி நெருக்கடி இதற்குக் காரணமாகலாம்). முதல் இதழ் விபுலாநந்தர் நூற்றாண்டு விழா சிறப்பிதழாகும். ஆதலின் விபுலாநந்தர் தொடர்பான கட்டுரைகள், கவிதைகள் பலவுள்ளன. கட்டுரைகளுள் ஒன்று,விபுலாநந்தரது சமூகநோக்கு. (எழுதியவர் கலாநிதி சி. மௌனகுரு);இங்கு சாதிபற்றிய அடிகளின் நோக்கு,பல்லவர்கால அடியார்கள் பற்றிய அடிகளின் நோக்கு என அடிகளாரின் எழுத்துக்களிலிருந்து சான்றாதாரங்களும் நடைமுறையில் அடிகளார் செய்த சேரித்தொண்டும் பேசப்படுகின்றன; இத்தகைய சமூக நோக்கிற்கான காரணங்கள் ஆராயப்படுகின்றன. சிறிய கட்டுரையாயினும் ஆழமானது. மற்றொரு கட்டுரை, விபுலாநந்த அடிகளார் நூற்றாண்டில்... செய்ய வேண்டியவை (செ. யோகராசா) என்பது. ஐந்து முக்கிய விடயங்களை இக்கட்டுரை வற்புறுத்துகிறது. கட்டுரைகள் தொகுக்கப்படல் (அவ்வேளை காலவாரியாக அமைதல், மூல பாடத்திறனாய்வு என்பன அவசியம்) மறுபதிப்புகளின் அவசியம், ஆதாரபூர்வமான வாழ்க்கை வரலாறு, காத்திரமான ஆய்வு இடம்பெறல்,காட்சியகம் அமைதல் என்பனவே அவை. நூற்றாண்டு விழா சபைத்தலைவருடனான பேட்டி (முன்னாள் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. கே தியாகராஜா) யும் இடம் பெற்றுள்ளது; முற்கூறிய கட்டுரையில் வற்புறுத்தப்பட்ட விடயங்களும், பேட்டியில் கூறப்பட்ட செயற்திட்டங்களும் இது வரை எவ்வளவு தூரம் நிறை வேறியுள்ளன என்பதனை இன்று சிந்தித்துப் பார்ப்பதற்கும் விபுலாநந்த அடிகளது ஆர்வலர்களுக்கு கிழக்கொளி மூலம் வாய்ப்பேற்பட்டுள்ளது. விபுலாநந்தரும் சிவானந்த வித்தியாலய நூலக நினைவுகளும் என்ற கட்டுரை (நூலகர், சா. தவமலர்தேவி) சில புதிய தகவல்களை முன்வைக்கிறது. ஆகவே நூற்றாண்டுச் சிறப்பிதழ் என்ற விதத்தில் கிழக்கொளியின் முயற்சி பாராட்டத்தக்கது.

சமுதாய வளர்ச்சியில் பல்கலைக் கழகங்களின் பங்கு, (கே. ராஜகோபால்) என்ற கட்டுரை சிந்திக்கத் தூண்டும் சில கருத்துகளைத் தருவதுடன் கிழக்குப் பல்கலைக் கழகம் பற்றி இணைத்துப் பார்க்கவும் தூண்டுகிறது. தேசியவாதம் (வே. குணரத்தினம்) அரசியல் விஞ்ஞானம் கற்கும் பல்கலைக் கழக மாணவருக்குப் பயன் தருவது;

வசந்த அழைப்புகள் என்ற புதுக்கவிதையூடாக, கல்லாறுசெல்வா, தான் ஈழத்தின் இன்னொரு மேத்தா தாசன் என்பதனை

உணர்த்துகின்றார். ஓ. கே. தயானந்தனின் கவிதை, அவர் இன்னுமின்னும் வளர வேண்டியவர் என்பதனைப் புலப்படுத்துகின்றது.

ஆறு மாத இடைவெளியில் வெளிவரும் ஒரு சஞ்சிகையில் இருதொடர்கதைகள் அவற்றின் தரம் ஒரு புறமிருக்க - வெளிவருவது பொருத்தமானதுதானா என்பது சிந்திக்கப்பட வேண்டியது.

கிழக்கொளி 2 ம் இதழிலும் உயர் மாணவருக்கு பயன்படும் மூன்று முக்கிய கட்டுரைகள் உள்ளன. இலங்கைத் தேசிய காங்கிரஸில் ஏற்பட்ட (தமிழ் -சிங்கள) பிளவு - ஓர் ஆய்வு (வே. குணரத்தினம்) ஞாயிற்றுச் சக்தியும் அதன் சமநிலையும் (எம். வர்ணகுலசிங்கம்) தமிழ்க் கவிதையுலகில் பாரதியின் புதுமைகள் (செ. யோகராசா) ஆகிய அம் மூன்றும் முறையே அரசியல், புவியியல், தமிழ் கற்கும் மாணவருக்கு மிகு பயனுடையவை.

கலாநிதி ப. வே. இராமகிருஷ்ணன் எழுதியுள்ள உயர்கல்வி என்ற(தொடர்) கட்டுரை ஆசிரியர் பெற்றோர், மாணவர்கள் அனைவருமே ஆழ்ந்து படிக்க வேண்டியது; எமது கல்வியுலகு பாதாளம் நோக்கிச் செல்கின்றது என்பதனை உறைக்கும்படியாகச்சொல்ல முற்படுகிறது;

புதுக்கவிதைகளுள் அன்பழகன் குரூஸ் அ.ரவிசங்கர் ஆகியோரின் படைப்புகள் தேறக் கூடியவை.

தவிர, வழமைபோல் துணுக்குகள், சொற்சங்கமப் போட்டிகள் முதலான விடயங்கள் இடம் பெற்றுள்ளன.

சுருங்கக் கூறின், கிழக்கொளி, கட்டுரைகளிலே காட்டும் கரிசனையை பிறதுறைகளிலும் காட்டவேண்டும்; கவிதைகளின் தரம் கவனிக்கப்படுவது அவசியம்; சிறுகதை ஈரிதழ்களிலும் இடம்பெறவில்லையென்பது கவனிக்கத்தக்கது. இரு தொடர்நவீனங்கள் இடம் பெற வேண்டியதில்லை. படைப்புகளைத் தேர்ந்தெடுப்பதிலே அக்கறை காட்டப்பட வேண்டும்.

மலரும் வாழ்வு, மட்டக்களப்பு மாவட்டக் கூட்டுறவாளர்களின் வெளியீடு; (ஆசிரியர் திரு. த.தேவகாந்தன்) கட்டுரைகள் பல்துறை சார்ந்தனவாக - இலக்கியம், சினிமா, சமயம் தத்துவம் என-அமைந்துள்ளமை பாராட்டப்படவேண்டியதாம்.

இலக்கியக் கட்டுரைகளுள் ஒன்று, சுவாமி விபுலாநந்தரின் மதங்க சூளாமணி (மகாவித்துவான் F. X. C. நடராசா). கட்டுரை வழமையான பாணியில் சொல்லாய்வு, உள்ளடக்க விளக்கம் என்றவாறு அமையும் அறிமுகக்கட்டுரையாயுள்ளது. மற்றொரு கட்டுரை, வாலியை இராமன் கொன்றது நீதியா? (ஆ. அரசரெத்தினம்) என்பது; பலகோணத்தில் பல்வேறு சான்றுகளை முன்வைத்து அது நீதியே என்று நிலை நாட்ட முற்படுகின்றார் ஆய்வாளர். பட்டப்படிப்பு மாணவருக்கு நன்கு பயன்படும் கட்டுரை இது. இந்திய சிற்ப ஓவிய, இசைக் கலைகளின் வளர்ச்சிபற்றிச் சுருக்கமாக எடுத்துரைப்பது தெய்வீகக் கலைகள் (கந்தப் பெருமான் சுந்தரலிங்கம்). சத்யஜித்ரேயின் கணசத்ரு சதானந்த சுவர்ணாவின் குபிமத்து இயலா ஆகிய இரு இந்திய நவீன திரைப்படங்களை அறிமுகஞ்செய்வதோடு அவற்றின் சமூகநோக்கு பற்றிச் சுருக்கமாக எடுத்துக்காட்டுவதாகவுள்ளது கலாநிதி சி. மௌனகுரு எழுதியுள்ள இந்திய சினிமா உலகில் இரு திரைப்படங்கள் என்பது.

சமயஞ்சார்பான கட்டுரைகளுள் இந்துக் கலாசாரத்தை உருவாக்கிய மனோபாவங்கள் (வ. சிவசுப்பிரமணியம்), இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் ஒற்றுமையின் அவசியம் (எம். ஐ. எம். உசனார்) இயேசுநாதர் வரலாற்றில் ஓர் உண்மை(போதகர் எஸ். அருமைராஜா) என்பன குறிப்பிடத்தக்கவை; சமய ஆர்வலருக்கு பெருவிருந்தாக அமைபவை.

தவிர, கணிதம், விஞ்ஞானம், கணக்கியல் பயிலும் மாணவருக்குப் பயனளிக்கின்ற கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. ஏனைய கட்டுரைகள் யாவும் கூட்டுறவுத்துறை சார்ந்தவை. வெளியிடுவோர் கூட்டுறவாளராதலின் இவை வெளிவருவது இயல்பானதேயாம்.

தரமான இரு சிறுகதைகளைத் தந்துள்ளது என்ற விதத்தில் மலரும்வாழ்வு நிச்சயமாகப் பெருமைப்பட வாய்ப்புள்ளது. ஒன்று அஜித் கௌர் என்ற புகழ்பெற்ற பஞ்சாபி எழுத்தாளரின் (மலையாளம் வழிவந்த) மொழிபெயர்ப்பான அலிபாபாவின் மரணம்; வீ. ஆனந்தனின் மொழிபெயர்ப்பு இது. இரு விதங்களில் இச் சிறுகதை பாராட்டப்பட வேண்டியது. ஒன்று, அதன் உள்ளடக்கமும் கலைத்துவமும் இன்றைய இந்தியாவின் அரசியல், நிர்வாகச் சீர்கேடுகள் குறியீட்டுப் பாங்கில் வெளிப்படுத்தப்படுகின்றது. (நவீன அலிபாபா முன் 40 கோடி கள்ளர்கள்!) மற்றொன்று, மூலத்திலிருந்து விலகாதவிதத் திலமைந்த உயிர்த்துவமான மொழிபெயர்ப்பு முறைமை, (தமிழகத்தில் க. நா. சு. தொடக்கம் பிரம்மராஜன் வரை பலர் இருக்க, ஈழத்தில் கே. கணேஸ், அன்னலட்சுமி ராஜதுரை சு. இராமச்சந்திரன், ஆனந்தன் போன்ற மிகச்சிலரே மொழிப்பெயர்ப்புக் கைங்கரியத்தில் ஈடுபடுகின்றனர்) எமது 'பிரபல' எழுத்தாளரால் நிச்சயம் வாசிக்கப்படவேண்டியது.

இளம் எழுத்தாளரான மணிமாறன். கனகசூரியம் எழுதிய அனுதாபம் என்ற சிறுகதை, மற்றொன்று. சமகால நிகழ்வொன்று கலைநேர்த்தியுடன் இங்கு வெளிப்படுகிறது. முதிய எழுத்தாளரொருவரது படைப்பு என்று துணிந்து கூறக்கூடிய விதத்தில் அமைவது இவ்இளைஞனின் இச்சிறுகதை. மலரும் வாழ்வு எதிர்காலத்தில் நன்கு மலரக்கூடிய எழுத்தாளனொருவனை அறிமுகப்படுத்தியுள்ளதென்றவிதத்தில் பெருமைப்படலாம்.

மூன்று கவிதைகளுள் குறளடிகள்கலந்தமைந்த, போதைப்பொருள்பற்றிய கவிதையொன்றுமட்டுமே (சிந்திப்பீர் செகத்தீரே -தேவா) ஓரளவு நினைவுகூரத்தக்கதாம்.

சிறந்த சிறுகதைகள் இரண்டினைத் தந்துள்ளமை தவிர, கிழக்கொளி பற்றிக் கூறிய கருத்துக்கள் மலரும் வாழ்விற்கும் பொருந்துவன (தொடர் நவீனங்கள் வெளியிடும் கைங்கரியத்தை மலரும் வாழ்வு மேற்கொள்ளவில்லை)

'தொண்டன்' திரு/மட் மறை மாவட்ட சமூகத் தொடர்பு நிலையத்தினால் நீண்டகாலமாக வெளியிடப்பட்டு வருவது. சமய நோக்கே முதன்மையாயினும், தன் எல்லைக்குள் நின்று கலை இலக்கிய முயற்சிகளுக்கும் களம் அமைத்து வருகின்றது.

கிழக்கொளி போன்றே கட்டுரைகள் முதலிற் கவனிக்கப்பட வேண்டியன. விபுலாநந்தர் நூற்றாண்டுச் சிறப்பிதழில் அடிகள் பற்றிய கட்டுரைகளும் கவிதைகளும் வெளியாகியுள்ளன. கட்டுரைகளுள் 'பாரதி பாடலும் விபுலாநந்த அடிகளாரும்' (தமிழ்மணி) புதிய சில தகவல்களை வெளியிடுகிறது. 'யாரைத்தான் நம்புவதோ? (ஆறுமுகம் அரசரெத்தினம்) அடிகள் தொடர்பான மூன்று பிரச்சினைகள் (i) பிறந்த திகதி (ii) பிறந்த இடம் (iii) ஆக்கம் - பற்றி அலச முற்படுகிறது. இவற்றுள், மூன்றாவது விடயம் சந்தேகமின்றி ஏற்கப்படக் கூடியது; அது பேராசிரியர் ஆ. சதாசிவத்தின் அறியாமை என்பதுதான் உண்மை. இரண்டாவது விடயம், அடிகளார் பிறந்த இடம் பற்றி தமிழக அறிஞர் குறிப்பிடும் தகவல் தவறானதென்பது வெள்ளிடைமலை. தமிழ்த் தாத்தா உ. வே. சா. தொடக்கம் துணைவேந்தர் மு வ வரை அறிந்தும் அறியாமலும் ஈழத்தவர் பற்றி பல தவறான தகவல்களைக் குறிப்பிட்டு வருவது ஆய்வாளரறிந்த விடயமே. (மிக அண்மையிற் கூட டாக்டர் க. சண்முகசுந்தரம் ஈழத்து வட்டார நாவல்கள் தொடர்பாக சில பிழையான தகவல்களைத் தந்துள்ளார்) மூன்றாவது விடயம் - பிறந்த திகதி - ஆதார பூர்வமாக(வித்துவான் கமலநாதனால்) நிறுவப்பட்டிருந்தாலுங்கூட அதனை ஏற்க மறுப்பது இக்கட்டுரையாளரது குறுகிய பார்வையையே வெளிப்படுத்துகின்றது. உலகின் முதல் தமிழ்த்துறைப் பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர் என்ற கட்டுரை (எஸ் புவனேந்திரன்) சான்றாதாரங்களுடன் இடம் பெறுமாயின் பாராட்டப்பட வேண்டியது. காலப்பின்னணிக்கு முதன்மை கொடுத்து அடிகளின் தமிழ்ப்பணி முக்கியத்துவம் பற்றிச் சுருக்கமாக ஆராய்கின்றது விலாநந்த அடிகளாரின் தமிழ்ப்பணி-சில குறிப்புகள்(செ.யோகராசா) என்ற கட்டுரை. கல்விப்பணிகளின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைக்க முயல்கிறது தியாகசீலர் சுவாமி விபுலாநந்தர்(அன்புமணி) அடிகளார் பற்றிய ஞானச்சூரியன் என்ற கவிதையும் ( எம். எல். எம். அன்ஸார் ) முழுமை பெறாததுபோல் அமைந்தாலும்-திருப்தி தருவதே சுருங்கக்கூறின் கிழக்கொளி மலரும்வாழ்வு சஞ்சிகைகளை விட, தொண்டனின் விபுலாநந்தர் பற்றிய கட்டுரைகள் குறிப்பிடத்தக்கன.

தவிர, உளவியல் ஆய்வுத் தொடர் தமிழர் நாகரிகம், தமிழ் இலக்கியம் தொடர்பான கண.மகேஸ்வரனின் கட்டுரைகள், கலை, இலக்கிய நிகழ்ச்சிப் பதிவுகளான இலக்கிய மஞ்சரித் தொடர் என்பனவும் மனங்கொள்ளப்பட வேண்டியனவே.

ந. பார்த்திபன், கண. மகேஸ்வரன், கிறிஸ்ரி முருகுப்பிள்ளை ஆகியோரின் சிறுகதைகள் இடம் பெறுகின்றன. இவை மேலும் பொருள் ஆழத்தையும், கலைத்துவத்தையும் நாடி நிற்கின்றன. ந. பாலேஸ்வரியின் தொடர் நவீனமொன்று இடம் பெறுகிறது.

தவிர, ஒவ்வொரு தொண்டன் இதழிலும் மூன்றில் இரு பங்கு கிறிஸ்தவ சமயஞ்சார்பான கட்டுரைகள், கதைகள், கவிதைகளே; முற்குறித்தவாறு அது தவிர்க்க இயலாததே.

எவ்வாறாயினும் சமயஞ்சார்ந்த சஞ்சிகையொன்று கலை, இலக்கியப் படைப்புக்களுக்கு அவற்றின் தரம் ஒரு புறமிருக்க - இடமளிப்பது பாராட்டப் படவேண்டியது

காகித மலர் கல்லச்சு இதழாக தேசிய காகிதக் கூட்டுத்தாபனத்தினால் (வாழைச்சேனை) வெளியிடப்படுவது. (ஆசிரியர்: செ. ஸ்ரீகோவிந்தசாமி). தமிழிலும் (சில முக்கிய ஆக்கங்கள்) ஆங்கிலத்திலுமாக இருமொழிகளிலும் வெளிவருவது: காகித ஆலை உத்தியோகத்தர்களின் படைப்புகளே இடம் பெறுவது. கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் தொடர் நவீனங்கள் என்பன மட்டுமன்றி, சோதிடம், பாவையர் பக்கம், கிசுகிசு புதிர்கள், நகைச்சுவை துணுக்குகள் முதலான பல அம்சங்கள் இடம் பெறுவதும், அவற்றின் தரமும் எவ்வித சந்தேகமுமின்றி காகித மலரை ஒரு ஜனரஞ்சகமான இதழாக மாற்றி விடுகின்றன. தவிர, காகித ஆலை தொடர்பான பல செய்திகள், ஊழியர் தெரிவிக்கும் வாழ்த்துகள், அனுதாபங்கள், ஓய்வுபெறுவோர் விபரம் முதலிய அம்சங்களும் வெளிவருகின்றன. சிந்திக்க வைக்கின்றதோ இல்லையோ வாய்விட்டுச் சிரிக்க வைக்கும் துணுக்குகள் பல இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது; கவிதைகளுள் ஒரு சில (எ-டு:- நாட்டார் பாடல் மெட்டிலமைந்த 'ஏறி ஏறி இறங்கணும் - சிவபாதம்; கண்ணதாசனின் 'பார்த்தேன் சிரித்தேன்' பாணியிலமைந்த 'புகைத்தேன் பகைத்தேன்' - ருத்ரா கணேசன்) ரசிக்கக்கூடியன. பல்துறை ஊழியர்களது படைப்பாற்றலுக்கும் களம் அமைத்துள்ள காகிதமலர் ஆரோக்கியமான விமரிசனத்துக்கும் ஆற்றலுக்கும் உட்படுமா என்பது ஐயமே; அத்தகைய நிலை ஏற்படுமாயின் ஒரு சில கவிஞர்கள், நகைச்சுவைப் படைப்பாளிகள் எதிர்காலத்தில் உருவாகலாம்.

ஒட்டுமொத்தமாக மேற்கூறிய நான்கு சஞ்சிகைகளையும் மதிப்பிடும்போது சில முக்கிய விடயங்களை அவதானிக்க முடிகின்றது. அவையாவன:

(அ) கட்டுரைகளே அதிகம் வெளிவருகின்றன. ஒப்பீட்டு நோக்கில் தரமுடையனவாக உள்ளன. ஆயினும், நவீன கலை, இலக்கியம் பற்றியன குறைவே.

(ஆ) கவிதைகள் விமர்சனநோக்கில் தரமுடையனவல்ல;

(இ) சிறுகதைகள் இடம்பெறுவது அரிது;

(ஈ) தேர்வுநோக்கில் மாணவருக்குதவும் ஆக்கங்களுக்கு முதன்மையிடமுண்டு.

(உ) கலை, இலக்கிய அமைப்புகளினாலோ நவீன கலை இலக்கிய நாட்டமுடைய ஆசிரியர்களினாலோ இச்சஞ்சிகைகள் வெளியிடப்படவில்லை.

ஆகவே, மேற்கூறியவற்றுள் எவையும் நவீன கலை இலக்கிய சஞ்சிகைகள் அல்ல. என்பது தெளிவு.

ஊ) குறிப்பிட்ட நிறுவனங்களினால் வெளியிடப்படும் இவை நிறுவனஞ் சார்ந்த படைப்புகளுக்கு முக்கியமளிக்கின்றன.

(எ) மறுபுறம், நிதி நெருக்கடி, ஆக்கங்கள் கிடையாமை, விற்பனைக் கஷ்டம் ஆகியவற்றை இவை எதிர்கொள்கின்றன.

ஆக, இறுதிநிலையில், இவ்விடத்தில் எம்மை ஒரு சிக்கலான கேள்வி எதிர்கொண்டு நிற்கின்றது மட்டக்களப்பு பிரதேசத்திலிருந்து கலை, இலக்கிய நோக்கு மட்டுமுடைய சிறு சஞ்சிகைகள் எவையும் ஏன் நீண்டகாலமாக வெளிவரவில்லை?

கலை இலக்கிய அமைப்புகள் இல்லையா? (இருக்கின்றன)

எழுத்தாளர்கள் கவிஞர்கள் இல்லையா? (இருக்கின்றார்கள்)

இலக்கிய ஆர்வலர்கள் இதுபற்றிச் சிந்திப்பது அவசியம். ஏனைய பிரதேசங்களிலிருந்து முனைப்பு, தடம், பூவிதழ், ஆகவே, நந்தலாலா தாயகம், அருவி, மல்லிகை என பற்பல வரும்போது மட்டக்களப்பு இவ்வாறு தானா?

மேற்கூறிய ஆரோக்கியமற்ற சூழ்நிலையில் இவ்வாண்டு தொடக்கம் வெளிவரும் 'படி' சஞ்சிகையின் வரவு சற்று உவகை தருகின்றது. ●

# மட்டு. மண்ணில் மஞ்சமிடு!

ரீ. எல். ஜவ்பர்கான்

ஒருவீட்டுப் பிள்ளைகளாய் மட்டு மண்ணில்
ஒற்றுமையாய் பல்லாண்டாய் வாழ்ந்து வந்த,
இருஇனமாம் தமிழ், முஸ்லிம் உறவுதன்னை
இருளாக்க வைத்திட்ட இந்தக் காலம்!
நறுமணத்து மல்லிகையாய் மணமே வீசி,
நாற்றமிலா மல்லிருந்த உறவுதன்னை-
செருக்கதனா லுடைத்துவிட்டு சுகமே காணும்,
செந்நெருப்பு கலவரம்நீ செத்துப்போவேன்!

★

கந்தனது வீட்டினிலே கசன்படுப்பான்!
காதர்காக் காவீட்டில் குணமிருப்பான்!
நந்தனவன் பிள்ளைக்கு நஸீரின் உம்மா-
நல்விதமாய் உணவூட்டி அனுப்பிவைப்பாள்,
கந்தையா வயலினிலே உமர் உழுது-
காசிபணம் வாங்கிநிதம் வாழ்வு தள்வான்!
இந்தநிலை தனைமாற்றி- அரவம்கீரி
இனமெனவே மாற்றிட்ட மோதல் வேண்டாம்!

★

இப்றாஹீம் முதலாளி வீட்டில் வந்து
இளையதம்பி மூத்தமகள் நெசவு நெய்வாள்!
அப்பமது சுடுகின்ற அன்னம் வீட்டில்
ஆதம்லெப் பைமகனோ சோறு தின்பான்!
உப்புமிள காய்த்தூளும், நெருப்புக்குச்சி -
உண்ணுகின்ற சோறதுவும் குறைந்து விட்டால்,
குப்பம்மா வீட்டிற்குள் ஓடிச் சென்று
குஸைமாவும் கொஞ்சமென வாங்கிக்கொள்வாள்!

★

மட்டுநகர் மண்ணினிலே மீண்டும் வந்து
மஞ்சமிடு! ஒற்றுமையே, உன்னை நாங்கள்
தொட்டிலிலே இட்டழகாய் தமிழ்ப்பா பாடி,
தோரணமும் போட்டழகாய் வரவேற்கின்றோம்!
பொட்டுடனே தொப்பிகளும் இணைந்து நின்று
பொங்குபுகழ் மட்டுநகர் தாயை வாழ்த்த
இட்டமுடன் எழுந்துவர வேண்டும் நாளை
இஸ்லாமும் சைவமதும், உயர்ந்து நின்று!

# நாட்டார் சமயம் - ஓர் அறிமுகம்

க. யோகநாதன் பி. ஏ. (சிறப்பு)

உலகின் நாட்டார் சமய வாழ்வை நோக்குவோமானால் அவை ஒரு பொது அடிப்படைப் பண்புகள் கொண்டு இருப்பதைக் காணலாம். பல அம்சங்களில் அவற்றிற்கு இடையே பொதுத் தன்மைகள் நிலவுகின்றன. இனம், மொழி, நாடு என்கின்ற வரையறைகளை தாண்டியும் இந்த பொதுத்தன்மைகள் ஊடறுத்து நிற்பதைக் காண முடியும். இத்தகைய பொதுத் தன்மைகள் நிலவுவதற்குரிய மூலம் நாட்டார் வாழ்க்கை முறையே ஆகும்.

நாட்டார் வாழ்க்கை என்பது இயற்கையை அண்டிய வாழ்க்கை ஆகும். இங்கு பிரதானமாக அவதானிக்க வேண்டியவை பொருளாதார உற்பத்தி முறமைகளும் அதனை அண்டிய உறவுகளும் ஆகும். நவீன கைத்தொழில் புரட்சியும் அதன் பலாபலன்களும், ஈட்டங்களும் சமூகப் பொருளாதார உற்பத்தி உறவுகளில் நிலைக்கு முன்னர் நிலவிய புராதன பொருளாதார உற்பத்தி முறைகளே நாட்டார் பொருளாதார உற்பத்தி முறைகளாகும். இத்தகையதொரு பொருளாதார உற்பத்தி முறமையின் மேல் கட்டுமானமாகவே நாட்டார் சமய வாழ்வு அமைகின்றது.

இந்த நாட்டார் சமய வாழ்வு என்பது இன்று கிராமப் புறங்களிலேயே காணப்படுகின்றது. பிரதானமாக அபிவிருத்தி குன்றிய ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் நாட்டார் சமய வாழ்வின் அம்சங்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. இன்றய உலகில் காணப்படும் நாட்டார் சமய வாழ்வின் பண்புகளை அவை நிலவும் சூழலைக்கொண்டு இரு வகையாகப் பிரிக்கலாம்.

I) காலமாற்றங்களுக்கு உட்பட்டு கடந்து போன சமூகத்தை அடையாளம் காட்டும் வகையில் எச்சமாக நிற்பவை;

II) நாட்டார் சமய வாழ்வின் மூலமாய் அமையும் சமுதாய வாழ்வு முறைகள் குறைந்த அளவிலாவது இருப்பதின் காரணமாய் அவற்றின் உடன் வாழ்வாய் நிற்பவை.

பொதுவாக நாட்டார் வழக்காறுகளை ஆய்வு செய்யப்புகும் பொழுது இவ்விரு வகையான சூழலையும் காணலாம். தமிழ் நாட்டார் வழக்காற்று ஆய்வுச்சூழல் இவ்விரு வகையிலும் அமையக்கிடக்கின்றது. சிறப்பாக கிராமப்புறங்களிலேயே இவை பெரும்பாலும் வழக்கில் உள்ளன. இந்தியாவின் தமிழ் நாட்டுக் கிராமங்களில் அனேகமானவை நவீன அம்சங்கள் குறைந்த புராதான காலச் சமுதாய அம்சங்கள் அமைந்து காணப்படுகின்றன. இதனால் இலங்கையின் தமிழ் பிரதேசங்களை விட அநேக அளவில் நாட்டார் சமய ஆய்விற்கு கூடிய தகவல்கள் தரக்கூடியவையாக தமிழ் நாட்டின் கிராமங்கள் காணப்படுகின்றன.

நாட்டார் சமயத்தின் பொதுப் பண்புகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்;

i) பல தெய்வ வழிபாடு.

ii) பேய் பூதம் பற்றிய நம்பிக்கைகள்;

iii) மந்திர மாயங்களில் நம்பிக்கை:

iv) சமய விவகாரங்களில் மூட நம்பிக்கை.

v) வாழ்வின் கடையாக சமயத்தைக் கொள்ளல்.

## பல தெய்வ வழிபாடு

நாட்டார் சமயத்தில் பல தெய்வ வழிபாட்டைக் காணலாம். இயற்கையை எதிர்பார்க்கும் வாழ்வு அல்லது இயற்கையுடன் இயைந்து வாழும் வாழ்வின் பொழுது தம்மால் விளக்க முடியாத இயற்கை விடயங்களை தமது சக்திக்கு அப்பாற்பட்டவையாகக் கருதினர். அவற்றை தம்மை விடச் சக்தியும், மகிமையும் உடையவை எனக் கருதினர். எனவே அவற்றை எல்லாம் வழிபட்டனர். மறுபக்கத்தில் தமது வாழ்க்கைக்கு நன்மை பயக்க இயற்கைச் சக்திகளையும் அவற்றிற்கு நன்றி செலுத்தும் முகமாக வணங்கினர். மேலும வீரர்களை வணங்கினர். பெண்ணின் 'தாய்' என்ற விசேடத் தகுதியின் காரணமாக தமது சமய வழிபாட்டில் பெண் தெய்வ வணக்கத்தைப் பிரதானப்படுத்தினர்.

தமிழர் சமுதாயத்தைப் பொறுத்தவரையில் இன்று இருவகையான தெய்வ வணக்கம் உண்டு.

i) ஆகம முறைப்படி அமைந்த தெய்வ வணக்கம்,

ii) கிராமியத் தெய்வ வணக்கம்.

கிராமியதெய்வம் வணக்கத்திலேயே நாட்டார் சமயப் பண்புகள் அதிகம் உண்டு கிராமப் புறங்களில் பல்வேறு வகையான தேவதைகளை தமிழர்கள் வணங்குகின்றனர். இதனை சிறு தெய்வ வழிபாடு என்பர். காத்தான் மாரியம்மன், காளி, வைரவர் போன்ற தெய்வங்களுடன் ஆகம முறைப்படி அமைந்த சமயத் தெய்வங்களான சிவன், விஷ்ணு, முருகன், பிள்ளையார் போன்ற தெய்வங்களையும் தமிழர்கள் வணங்குகின்றனர். பொதுவாக பல தெய்வ வழிபாடுதான் தமிழர்களின் இந்து மத வழிபாடாக இருப்பதைக் காண முடிகின்றது. பாம்பு வணக்கம், மர வணக்கம், பெண்தெய்வ வணக்கம் போன்ற தமிழர்களின் வணக்க முறைகளைக் காணும் பொழுது அவை மனிதனின் புராதன வழிபாட்டு முறையின் தொடர்ச்சியாக இருப்பதை விளங்கிக் கொள்ள முடிகின்றது.

நீரை, நிலத்தை, நெருப்பை தெய்வ அம்சத்துடன் பொருத்திப் பார்ப்பதும், இவற்றை வணக்கத்திற்குரிய ஒன்றாகக் கருதுவதையும் நாம் தமிழர்கள் மத்தியில் இன்றும் காணலாம். நிலத்தைப் பூமித்தாய் என்றோ கோமாதா என்றோ பெண் உருக் கொடுத்தே தமிழர்கள் மகிமைப் படுத்துகின்றனர். மனிதர்களைப் பெறுபவள் பெண். மனிதர்களின் உணவுத் தேவைகளைத் தருவது பூமி. எனவே தான் பெண்ணையும் பூமியையும் ஒன்றெனக் கண்டனர் தமிழர்கள்.

மனிதர்களாகப் பிறந்து சில பிரத்தியேகச் செயல்களைப் புரிந்தவர்களையும் தெய்வமாக வணங்கும் மரபு தமிழர்கள் மத்தியில் உண்டு. தமிழ் நாட்டின் மதுரை வீரன், காத்தவராயன் போன்ற தேவதைகள் இத்தகையனவே. தங்கள் வாழ்க்கையின் வெவ்வேறு தேவைகளுக்கு ஏற்ப அவற்றிற்கு தெய்வக் கற்பனைகளை கொடுத்து வணங்கும் சமய வழிபாடு, தமிழர்களிடம் இருந்து வருகின்றது. சரஸ்வதி, இலக்குமி, சக்தி, சுடலைமாடன், சுடலை வைரவர் என்றும் ஐந் தொழிலுக்கும் (படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல்) ஐந்து தெய்வங்கள் என்றும் பல வகையாக தெய்வங்களை ரூபப்படுத்தி வணங்கும் முறை தமிழர்களின் சமய வாழ்வில் இன்று வரை நிலவுகின்றது.

தமிழ் நாட்டில் வாழும் நாட்டார் சமுதாயத்தினரை ஆராய்வு செய்த மோசஸ் பொன்னையா நாடார்களின் சமய வழிபாடு பற்றிக் கூறும் பொழுது பின் வருமாறு கூறுகின்றார். ''தமது குலத்தில் பிறந்த பெரியார்களை சாமியாக வழிபடுவது. உ+ம் ஏரல் சேர்மன்சாமி, சாமித் தோப்பி முத்துக் குட்டிச்சாமிபோன்ற வழிபாடுகள் சக்தி தெய்வத்தை ஆண்டுக்கு ஒரு தடவையோ அல்லது இரு தடவையோ பூசை செய்து வழிபடல்'' மோசஸ் தரும் இச் செய்தி தமிழ் நாட்டில் நாட்டார்சமயப் பண்புகள் இன்னும் செல்வாக்குடன் திகழ்வதையே எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.

தமிழர்களிடையே சாதிக்கு ஒரு தெய்வம் என்ற வழமையையும்அவதானிக்கக்கூடியதாக உள்ளது. பிற்பட்ட வகுப்பினர் அல்லது சாதியினர் வழிபடும் தெய்வங்களும்' வழிபாட்டு முறைகளும் அதிக அளவில் புராதன தன்மை கொண்டு நிலவுகின்றன. மட்டக்களப்பில் வைரவர் வீரபத்திரர் போன்ற தெய்வங்கள் பிற்பட்ட வகுப்பினரால் தான் அதிக அளவில் வணக்கத்திற்கு உரிய தெய்வங்களாக்கப் பட்டுள்ளதை இன்றும் அறியலாம்.

இவ்வாறு நோக்கும் பொழுது நாட்டார் சமயப் பண்புகளில் ஒன்றாகிய ''பல தெய்வ வழிபாடு'' தமிழர்கள் மத்தியில் இன்னும் வழக்கில் உள்ளதை அறிய முடிகின்றது.

## பேய் பூதங்கள் மந்திர மாயங்களில் நம்பிக்கை

பேய் பூதங்கள், மந்திர மாயங்களில் நம்பிக்கை கொண்டு இருத்தல் நாட்டார் சமயப் பண்புகள் ஆகும். கரணங்கள், சடங்குகள் பற்றிய நம்பிக்கைகளும் இவற்றுள் அடக்கக் கூடியனவே ஆகும். நாட்டார் வாழ்க்கையின் பல்வேறுதுறைகளிலும் ஆராய்ச்சியாளர்களால் இவை அவதானிக்கப்பட்டு கூறப்பட்டுள்ளன; தமிழர்களின் கிராமிய வாழ்க்கையிலும் நாம் இதனைக் காணலாம்.

முனி, கரையாக்கன் போன்ற பேய்கள் பற்றிய நம்பிக்கை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு கிராமப் புறங்களில் இன்றும் உண்டு. சதுப்பு நிலங்களில் தோன்றும் இயற்கை நிகழ்ச்சியான தீப்பிழம்பு தோன்றுவதைக் கூட தமிழர்கள் ''கொள்ளி வாய்ப் பிசாசு'' என்பார்கள். இலங்கையர் கோனின் வெள்ளிப் பாதசரம் என்ற கதையில், கூட நாம் இந்த நம்பிக்கையை அவதானிக்க முடிகின்றது.

பேய்கள் பிடித்துக் கொள்வதினால் தான் மனிதர்களுக்கு உடல் ரீதியாகவும் வேறுபல வழிகளிலும் தீங்குகள் சேருகின்றது என்றும், அத்தகைய சந்தர்ப்பங்களில் பூசாரியின் துணைகொண்டு பேயை மந்திரித்து அகற்றுவதையும் அதன் பொருட்டு உயிர்ப் பலிகள் கொடுக்கப்படுவதையும் நாம் இன்று வரை மட்டக்களப்பு கிராமப் புறங்களில் தெளிவாகக் காணலாம்.

மனிதன் தனது விருப்பு வெறுப்புக்களை மந்திரம் மூலம் சாதிக்கலாம் என்றும் அதன் பொருட்டு பேய், பில்லி, சூனியம் பற்றிய நம்பிக்கைகள் தமிழர்கள் மத்தியில் உண்டு. வசியம் செய்தல், பிரிவுக்குச் செய்தல், பேய், பில்லி, சூனியங்களை ஏவுதல் அல்லது ஏவி விடப்பட்டதை துரத்துதல் போன்ற நம்பிக்கைகள் தமிழர்களிடம் உண்டு. மட்டக்களப்பின் கிராமப் புறங்களில் இவற்றை நிறையக் காணலாம்.

மழை குறைந்த காலங்களில் மழையை வேண்டிச் செய்யும் சடங்குகள் சமயத்தன்மை கொண்டு இருக்கும். இலங்கையின் தமிழ் பிரதேசங்களைவிடத் தமிழ் நாட்டிலேயே இத்தகய சடங்குகள் அதிகம். பயிர் வளத்தைப் பெருக்க, அதனைக் காக்க, அதனைப் பெற என்று எல்லாம் சமய மூல நம்பிக்கைகளும், சடங்குகளும் தமிழர்கள் மத்தியில் உண்டு. இந்த வகையில் மட்டக்களப்பின் வயற் பிரதேசங்களில் நடாத்தப்படும் கள வெட்டிப் பூசை, புதிர்ப் பொங்கல், வயல் வெளிகளில் நடாத்தப்படும் வைரவர் மடை, நாகதம்பிரான் பூசை, என்பன குறிப்பிடக் கூடியவை.

இதில் களவெட்டிப் பூசை சிறப்பானது. பயிர் அறுவடை செய்து போர் வைத்த பின்னர் போரை அடித்து நெல்லைப் பெற முன்னர் போர் அடிக்கும் களத்தில் இப்பூசை செய்யப்படும் சந்தர்ப்பங்களில் அநேகமாய் ஒருவர் சாமி வந்து ஆடுவார் (வெறியாட்டு) அவரில் வந்த சாமிதான் தேவதையாகக் கொள்ளப்படும் அத்தேவதையின் குறியின்படி ஒழுகினால் 'போர்ப் பொலி' அதிகம் பெறலாம் என்பது நம்பிக்கை. கள வெட்டிப்பூசை. செய்தால் தொடர்ந்து அக்காலத்தில் அடிக்கப்படும் ''போர்ப் பொலி'' அதிக அளவுடையதாக இருக்கும் என்ற நம்பிக்கை உண்டு. பூசையில் வெறிவந்து ஆடுபவர் பலிகளும் கேட்பார். அவ்வாறு கேட்கும் பட்சத்தில் அவை கட்டாயம் கொடுக்கப்படல் வேண்டும் அவ்வாறு கொடுக்கா விடின் போர்ப் பொலி குறையும் என்பது நம்பிக்கை. மட்டக்களப்பின் மேற்குப்புறக் கிராமங்களில் இத்தகைய சடங்குகளை இன்றும் காணலாம்.

புதிர்ப் பொங்கல் என்பது பயிர் அறுவடைக்கு தயாரானதும் நடாத்தப்படுவது.

நவீன கருவிகள் இன்று கிராமப் புறங்களை நோக்கிச் சென்று கொண்டு இருக்கையில் தமிழர்களின் நாட்டார் சமய நம்பிக்கைகள் அந்த நவீன கருவிகளையும் விட்டு வைக்கவில்லை. உதாரணமாக துப்பாக்கியால் மிருகங்களை வேட்டை ஆடுவதும் வேட்டையின் பொழுது மிருகங்களுக்கு துப்பாக்கிச் சூடு படுதலும் மந்திரக் காரணங்கள் கொண்டு கற்பிக்கப்படும், துப்பாக்கிச் சூட்டிற்கு மிருகங்கள் குறிதப்பும் பொழுது அல்லது சூடுபட்டும் அவை வேட்டைக் காரன் கைக்கு அகப்படாத பொழுது அவை வேட்டைக்காரனுடன் குரோதம் உடையவனின் மந்திரச் செயலாக கற்பிக்கப்படும். மட்டக்களப்பின் கிராமப்புற வேட்டைக்காரர்களிடம் இந்த நம்பிக்கை உண்டு.

கிராமப்புறங்களில் உள்ள சிறு தெய்வ ஆலயங்களில் தெய்வம் ஆடுதல், தீ மிதித்தல் என்பவை மந்திரத்திற்கு உட்பட்டது என கிராமிய தமிழ் மக்கள் நம்புகின்றனர். தெய்வம் வந்து ஆடுபவரை மந்திரத்தால் 'கட்ட' முடியும் (ஆடாது ஆக்குதல்) என்பதும் அவ்வாறு கட்டுதல், கட்டியதை எழுப்புதல் என்பவை மந்திர வாதிகளுக்கு இடையே உள்ள போட்டியையும் திறமையையும் காட்டி நிற்பதாக விதந்து பேசப்படுவதும் உண்டு.

விரும்பிய காரியத்தில் சித்திபெற, பகையாளிகயை பழி வாங்க மந்திரத்தால் இயலும் என்பது தமிழர் கிராமங்களில் காணப்படும் நம்பிக்கை ஆகும்.

இறந்தவர்கள் ஆவி உருவத்தில் வாழ்வார்கள் என்ற நம்பிக்கையும் உண்டு. இத்தகைய இறந்த ஆத்துமங்கள் அவை அவற்றின் வாழ்வு சிறப்பு என்பவற்றிற்கு ஏற்ப நன்மை, தீமை ஆகிய காரியங்களில் ஈடுபடும் என்றும் அவற்றை மந்திரத்தால் கட்டுப்படுத்தலாம் என்றும் கிராமப்புறங்களில் நம்பப்படுகின்றது.

இறந்த மூதாதையர்களை திருப்திப்படுத்தும் சடங்குகளும் தமிழர்கள் மத்தியில் உண்டு. மட்டக்களப்பில் அவற்றை 'மாளயம்' அல்லது 'கல்லைக்கு' வைத்தல் என அழைப்பர். வருடத்திற்கு ஒரு தடவை இத்தகய சடங்குகளை கிராமமக்கள் நிறைவேற்றுவர்.

புதிய தொழில்களைக் தொடங்கும் பொழுது மடை வைத்து பூசை செய்து தேவைப்படின் உயிர் பலிகள் கொடுத்தும் தொழில்களைத் தொடங்கும் பழக்கம் அல்லது நம்பிக்கை தமிழர் தம் கிராமப் புறங்களில் உண்டு. முச்கியமாக கிரமமான அல்லது ஆபத்தான தொழிகல்களில் இத்தகய சடங்குகளை பெரிதும் காணலாம்.

இவ்வாறான பேய், பூதம், மந்திர மாயம் சடங்குகள், கரணங்கள் என்பவை தொடர்பான நம்பிக்கைகள் இன்றும் பல பட தமிழர் நாட்டார் வாழ்வியலில் உண்டு.

**சமய விவகாரங்களில் மூட நம்பிக்கைகள்.**

சமயத்தை கண்மூடித்தனமாக நம்பும் போக்கு நாட்டார் சமயத்தின் பொதுப்பண்புகளில் ஒன்றாகும். பல் வகையான நோய்களுக்கு பேய் பிசாசுகளே காரணம் என நம்பப்பட்டு, அவற்றை விரட்ட தெய்வ அநுக்கிரகம் பெறுவதிலும், சடங்குகள் செய்து மந்திரித்து அவற்றை விரட்டி விடுவதின் மூலம் நோய்களில் இருந்து மீட்சி பெறலாம். என்ற நம்பிக்கைகளை தமிழர்களிடம் குறிப்பாகக் கிராமப் புறத்தமிழர்களிடம் காணக் கூடியதாக உள்ளது. நோயைப்பற்றி மருத்துவன் கூறுவதிலும் பார்க்க மந்திரவாதி கூறுவதையே அதிகம் நம்பும் மனிதர்கள் தமிழரிடையே உண்டு.

பொருட்களை களவு கொடுக்கும் பட்சத்தில் 'மை போட்டுப் பார்த்தல்' போன்ற பல்வேறு சாத்திரங்கள் பார்த்தலில் நம்பிக்கை உடையவர்களாக இன்றும் தமிழர்கள் உள்ளனர். மனிதனின் காரிய சித்திக்கும், காரிய சித்தியின்மைக்கும் பல் வகையான மூட நம்பிக்கைகளை தமிழர்கள் கொண்டு இருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. மந்திரித்த அட்சரக் கூடு அல்லது தகடு தெய்வாம்சம் பொருந்தியவை என்றும் இவைகளை தொழிற் தலங்களில் வைத்தால் தொழில்கள் சிறக்கும் என்ற நம்பிக்கை தமிழர்களிடம் உண்டு.

சிலரிடம் சில தெய்வங்கள் வாலாயம் ஆகி விடுகின்றன என்றும் அவ்வாறு வாலாயம் ஆகும் பொழுது அதைக் கனம் பண்ணி அதற்கு ஏற்ப தனது நடத்தைகளை ஒருவன் அமைத்துக் கொள்ளல் வேண்டும். அவ்வாறு அமையாத பட்சத்தில் வாலாயம் ஆகிய தெய்வம் தீங்கு விளைவிக்கும் என்ற நம்பிக்கை தமிழர்களிடம் உண்டு. தெய்வங்கள் உயிர் பலி கேட்பன என்றும், அவ்வாறு தெய்வங்களுக்கு உயிர்பலி கொடுக்காத பட்சத்தில் அதனால் தீமை விளையும் என்பது தமிழர்களின் நம்பிக்கை.

புதையல்கள் உண்டு என்றும் அப்புதையல்களை பூதம் அல்லது பாம்பு போன்றவை காக்கின்றன என்றும் மந்திரம் மூலம் இவற்றைக் கண்டு உயிர்பலி கொடுப்பதின் மூலம் அப்புதையல்களைப் பெறலாம் என்ற நம்பிக்கையும் தமிழர்களிடம் உண்டு இந்த உயிர் பலிகள் பல தரத்தவை. நரபலியும் இதனுள் அடங்கும்.

மந்திரித்த தாயத்துக் கட்டுதல், நூற்கட்டுதல், விபூதி போடுதல், பார்வை பார்த்தல் தண்ணி ஓதுதல் போன்ற நம்பிக்கைகள் நோய்களின் பொருட்டு தமிழர்களால் கடைப்பிடிக்கப்படுகின்றன. மேலும் சகுனங்கள் சார்ந்தும் பல வகையான மூடநம்பிக்கைகள் தமிழர் மத்தியில் உண்டு.

குல தெய்வம், வீட்டுத் தெய்வம் என்கின்ற நம்பிக்கைகளும் அவற்றைச் சுற்றிய மூட நம்பிக்கைகளும் தமிழர்களிடம் உண்டு. இது தொடர்பாய் இலங்கை மலை நாட்டுத் தமிழரிடையே ஆய்வு செய்த வ. தேவராஜ் தரும் செய்தி கவனத்திற்கு உரியது.

''ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு தெய்வம் இருக்கும். வீட்டுத் தெய்வம் இரகசியமாகவே இருக்கும். காரணம் தெய்வத்தை அறியின் அதில் இருந்து தாம் பெறும் நன்

மைகளை மந்திரத்தால் இழக்கச் செய்வர் என்ற அச்ச நம்பிக்கையே''

இத்தகைய சமயம் சார்ந்த அனேக மூட நம்பிக்கையை தமிழ் நாட்டார் சமய வாழ்வில் காணலாம்.

## முடிவுரை

பொதுவாக நோக்கின் நாட்டார் சமயங்கள் இன்னது இன்ன சமயம் எனத் திட்டவட்டமான சட்ட சம்பிரதாயங்களுடன் இருப்பதில்லை. அனேகமாக அதனைக் கடைப்பிடிக்கும் மக்கள் குழுக்களை அடையாளம் கண்டே அவர்களின் நாட்டார் சமய வழிபாட்டையும் அடையாளம் காண முடியும்.

தமிழர்களின் கிராமப்புறச் சமயங்களை திட்ட வட்டமாக வரையறுத்து இது தான் எனக் கூறுதல் இயலாது. குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய தெய்வ உருவங்கள் தமிழர் நாட்டார் சமய வழிபாட்டில் இல்லை என்றே கூறலாம். தற்காலிகமாக ஒரு சின்னம் தெய்வம் ஆக்கப்படும் நாட்டார் சமய வழிபாட்டில் கோயில் என்ற ஒன்று நிலையாக இல்லாத நிலையும் உண்டு. காட்டுத்தடிகளால் அமைக்கப்படும் பந்தல்கள் அல்லது அலங்கார வளைவுகள் திடீர்கோயில் ஆகும்; இலங்கையின் மலைநாட்டில் இதனைக் காண முடியும் என்கின்றார் அப்பகுதியில் ஆய்வுகள் மேற்கொண்ட வ. தேவராஜ். மட்டக்களப்பின் கிராமப் புறங்களிலும் இதனை அவதானிக்கலாம். அதே நேரத்தில் ஒரு கொட்டிலோ அல்லது சிறிய கட்டிடக் கோயிலோ கொண்டு சிறு தெய்வ ஆலயங்கள் மட்டக்களப்பில் அமைந்தும் காணப்படுகின்றன.

வாழ்க்கையின் நன்மை, தீமைகளையும் முக்கிய நாட்கள், என்றெல்லாம் வாழ்க்கையின் சகல விடயங்களிலும் சமய ஒழுக்காறுகளை முதன்மை செய்வது நாட்டார் சமயப் பண்பு ஆகும். திருமணம், இறப்பு, மகப்பேறு, கொண்டாட்டங்கள், பயணம், தொழில் முயற்சி, ஓய்வு நேரப் பொழுது போக்கு என வாழ்வின் சகல சந்தர்ப்பங்களையும் சமயச் சார்பைக் கண்டே விளங்குதலிலும், விளக்குதலிலும் தமிழரிடம் நாட்டார் சமய முறைமை உள்ளதை காணக் கூடியதாக உள்ளது.

இதுவரை நாம் நோக்கியவற்றில் இருந்து நாட்டார் சமயப் பண்புகள் தமிழர் தம் வாழ்விலும் காணப்படுவதைக் கண்டோம். நவீன நாகரீகம் இன்று கிராமங்களை நோக்கிச் சென்று கொண்டு இருப்பதால் இப்பண்புகளில் இன்று தளம்பல்கள் நிகழத் தொடங்கி உள்ளன.

### உசாத் துணை நூல்கள்

1) இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல் (யாழ். பல்கலைக் கழக வெளியீடு)
2) நாட்டுப்புற இலக்கியம் (புலவர் இரா. சுரேந்திரன்)
3) நாட்டார் வரலாறு (மோசஸ் - பொன்னையா)
4) சாகியத்தின் தோற்றம் (குணா)
5) தமிழகப் பழங்குடி மக்கள் (பதிப்பாசிரியர் எஸ். சத்தியலிங்கம்)

# வழி!

வழியில் போகாதே
காட்டில் நட

வழியில்
எல்லாம் தெரியும் உனக்கு
எல்லாம் உண்டு உனக்காக
அமர்ந்து இறுகிய பாதை
சுமக்க வாகனம்
உறக்கம் வளர்ப்பாய் நீ

காட்டில்
என்ன தெரியும் உனக்கு
என்ன உண்டு உனக்காக
உன் கையில் நீ மட்டும்
உழைப்பும் விழிப்பும்

வரவேற்பில்
ஊன் திளைக்கும்
எதிர்ப்பில்
ஆன்மா வியர்க்கும்

வழியில் பலி
காட்டில் வாழ்வு

காட்டில் நட!

—வாசுதேவன்—

# ஓடி விளையாடு பாப்பா

பேராசிரியர் ப. வே. இராமகிருஷ்ணன்

"ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா, கூடி விளையாடு பாப்பா, ஒருவரையுந் தள்ளாதே பாப்பா'' என்றே சுப்பிரமணிய பாரதி சிறுவர்களுக்கு வழி காட்ட முயன்றான். இறைவனையே சிறுமியாகக் கண்ட கவிஞன், எத்தகைய சுதந்திர சமூகம் உருவாக வேண்டும் என்பதில் அக்கறைகொண்டு சிறுவர்களோடு தன் அறிவுரையை ஆரம்பிக்கிறான்.

''பாட்டுக்கோர் புலவன்'' பாரதியென புகழடைந்த சுப்பிரமணிய பாரதி, தன் நாட்டின் சுதந்திர போராட்டத்தில் தீவிரமாகப் பங்குபற்றியவராக இருந்தார். வறுமையோடு அடக்கு முறைக்கும் இலக்காக இருந்தது அவரது வாழ்க்கை. இதனால் தன் நாட்டு மக்களது நல்வாழ்வில் அக்கறை கொள்ளாதிருந்த அந்நிய ஆட்சியாளரிடம், சரணடையவில்லை. தன்மானம் பெரிதென மதித்த வைராக்கியம் கொண்டவராக இருந்தார். தனது கவித்திறமையை புகழ் தேடுவதற்கென்றோ பரிசில்கள் பெறுவதற்கென்றோ பயன்படுத்தவில்லை. அவரது பணி கர்மயோகத்தைச் சார்ந்ததாக இருந்ததனாலேயே நிலையான புகழும் அவரைச் சென்றடைந்தது.

நிலையான, நல்ல, பெறுமதியுள்ள பண்புகளை தன் ஞானக் கண்களினால் கண்டுணர்ந்த புலவன், சமூகத்தில் அவற்றை நிலைத்திருக்கவைப்பது எவ்வாறு எனும் முயற்சியில் சிறுவர்களோடு ஆரம்பிக்கிறான். குயவன், களியினின்றும் தான் விரும்பிய வடிவில் பானையை உருவாக்கியதை ஒத்ததாகஇருக்கவில்லை. ஒரு சிறுவனது உள்ளம் வெற்றுப் பானையென நினைத்து 'நோட்ஸ்' கொடுத்து நிரப்ப முயலவில்லை. மதிப்புள்ள தொழில்கள் இவையென, நாமே நமது அறியாமையில் நிர்ணயித்துக்கொண்டு, ஒருவர் தோழில் ஒருவர் ஏறி மிதிக்க முயலும் பயிற்சி கொடுத்து வருவதின் பலாபலன்களை கண்டு அனுபவித்து வருகிறோம் என்பதை மூடி மறைக்கவும் முயலுகிறோம். நல்லது எதுவெனக் கூறும் அதே வேளையில், கெடுதியானது எதுவெனவும் நம் புலவன் கூற முயலுகின்றான். இது ஞானிக்கும் ஞானமில்லாதவனுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைப் புலப்படுத்தும். ஒன்றோடொன்று இசைவுபடாத முரண்பட்ட மார்க்கங்கள்.

அநாதியாகவே மங்கள சொரூபமாக இருந்த உள்ளம் தன் தடைகளைத்தானே நீக்க வேண்டும் எனும் வாழ்க்கைத் தத்துவம் புலவனது படைப்புகளுக்கும் பின்னணித் தத்துவமாக இருந்தது. பிஞ்சு உள்ளங்கள், சட பொருளெனக் கருதி யந்திரமயமான அணுகு முறையாக இருக்கவில்லை. பிஞ்சு உள்ளங்களைப் பக்குவப்படுத்துவதாக இருந்தது. அன்னாரது முயற்சி. சிறு செடிகளுக்கு உரமூட்டி நீர் பாய்ச்சி வளர்ப்பதை ஒத்ததாக இருந்தது. இதுவே காலப்போக்கில் வளர்ந்து பெரும் விருட்சமாகக் காட்சியளிக்கும்.

ஓடி விளையாடென்றார். அதே வேளை சோம்பல் மிகக் கெடுதியென்றார். சுறுசுறுப்புள்ள மனிதன் தேவை. தாமச குணத்தவனான மந்தம் பிடித்தவனல்ல. சமூக வாழ்க்கையில் ஒருவன் உழைப்பாளியாக இருத்தல் வேண்டும். இல்லாவிடில் பிறர் உழைப்பில் தங்கியிருக்க நேரிடும். சமூகம் முன்னேறாது. அநீதி நிலவும். தனிப்பட்ட வகையிலும் பங்கம் விளைவிக்கும், சுயகௌரவத்துக்குப் பங்கம். சோம்பல் வாழ்க்கை தீய சிந்தனைகளுக்கும் போக்குகளுக்கும் நிலைக்களமாகி விடும்.

நாம் செய்யும் கருமங்களின் விளைவே நாம் வாழும் உலகம். நமது முன்னோர் செய்தவைகளின் தொடர்ச்சி. அவர்களது சாதனைகள் வாயிலாக நாம் வாழக்கூடியதாக இருக்கின்றது. இதனாலேயே, எம் தந்தையர்

நாடென்றதும் இயல்பாகவே ஒரு சக்தி பிறக்கின்றது எம் மூச்சினிலே என்கிறார். எம் முன்னோரது முயற்சியின் விளைவாக நாம் இன்பம் அனுபவிக்கிறோம் வீடுகள், வீதிகள், பழ மரங்கள், வயல், தோணிகள், வாகனங்கள், தொழிற்சாலைகள், பள்ளிக்கூடங்கள், ஆலயங்கள், வழமைகள், நீதி நூல்கள் என்றெல்லாம் அவர்கள் விட்டுச்சென்ற அரும் பெருஞ் செல்வங்கள். இதுவே சொத்து. தனியுடமை என்பதற்கல்ல தனியொருவர் குடித்துக் கும்மாளம் போடுவதற்கல்ல. நம்பிக்கைச் சொத்து (Trust) நாம் முன்னோரிடமிருந்து பெற்ற சொத்தை பேணிப் பாதுகாத்து அதனை மேலும் பண்படுத்தி அடுத்த சந்ததியினரிடம் கொடுத்துச் செல்ல கடமைப்பட்டுள்ளோம்.

சொத்தை அனுபவிப்பது என்பது பகிர்ந்து உண்பதிலேயே இன்பம் காணக் கூடியதாக இருக்கும். செல்வர்க்கு அழகு செருக்கினை தாங்குதல். எனது சுற்றாடலில் வாழ்பவர்கள் அடையும் திருப்தி கண்டு நான் அடையும் திருப்தி நிலை.'பரடு நடந்த சூழ் பல்லாரோடு உண்க' என்றனர். இது ஒரு வகையான இன்பம். ஆனால் தனியுடமையை போற்றியேற்றும் சமூகத்தில், பிறர் நலனைத் தன்னலமாகக் கருதுபவர்களை நிந்தனை செய்வார்கள்.பெறுமதியெனக் கொள்ளப்படும் விடயங்களில் கண்ணும் கருத்துமாக இயங்காது போனால் விளையாடித் திரிகிறான் என்பார்கள். இங்கு விளையாட்டு என்பது மிகக் குறுகியதும் தவறானதுமான பொருளைப் பெறுவதாக இருக்கின்றது.

விளையாட்டு என்பது குறுகின நோக்கங் கொண்டதல்ல. குழந்தை தன்னை மறந்த நிலையில் இன்பத்தை அனுபவிக்கின்றது. வஞ்சகம் சூது என்பதற்கிடமில்லை. ஆக்கப் படைப்பு எனக் கருதப்படும் செயல்கள் யாவும் தன்னலம் கொண்டனவாக இராது.'மெய் மறந்த நிலை'' எனச் சித்தாந்தம் கூறும். ஆகவே தான் இறைவனது படைப்புத் தொழிலை'திருவிளையாடல்' என்கிறோம். அவன் சாயலில் குழந்தை பக்குவப்படுத்தப்பட வேண்டும் என்பதனாலேயே பாரதியும் 'ஓடி விளையாடு பாப்பா' என்றான். செய் கருமங்கள் யாவும் இறைவனது படைப்பை ஒத்ததாக இருக்க வேண்டுமேயாகில், தன்னலமற்ற, பற்றற்ற கருமங்களாய் இருத்தல் வேண்டும். இது ஒரு வகை விளையாட்டு. இறைபணி. ஒரு வகை அர்ப்பணம். தன் தொழிலில் கண்ணும் கருத்தும். செயல் திறன். நிறைவு. இதனால் பெறும் இன்பம் தொட்டிலில் பழக்கம் சுடுகாடுவரை என்பதற்கிணங்கவே பாரதியும் ஓடி விளையாடு பாப்பா என்றான். ஓய்ந்திருக்காதே என்றான். சமூகமாய் வாழப் பழகிக் கொள்ளவே 'கூடி விளையாடு பாப்பா' என்றான். ஒரு குழந்தையை வையாதே என்றான்.

படிப்பும் கனிவு கொடுக்கும் நல்ல பாட்டும் விளையாட்டுக்குக் கொடுபடும் பண்புகளையே கொண்டவை. மாலை முழுவதும் விளையாட்டு. இவ்விதமாகவே குழந்தை தன்னைத்தானே பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். பறவைகளைப் போன்று பாப்பா சுதந்திரமாகவும் அழகாகவும் பறந்து திரிந்து வரவேண்டும், உயிர்கள் மீது கருணையுள்ளங்கொண்ட நற்பிரசையாவதற்குப் பக்குவப்பட வேண்டும். பக்கப்பலமாக இறைன் துணை நிற்பான் எனும் நம்பிக்கை உருவாகவேண்டும். இவற்றுடன் வேறு பல நற்பண்புகளை பெற்று வளரும் சமூகத்தை கவிஞன் கனவாகக்கண்டான். நனவாக்குவதில் வறுமையைக் கண்டு அஞ்சவில்லை. அடக்கு முறையைக் கண்டு வெருளவில்லை.

இத்தகைய கனவுகளை நனவாக்குவதென்பது தொடர்பணியாகவே இருத்தல் வேண்டும். இன்றைய குழந்தைகளே நாட்டின் எதிர்காலப் பிரசைகள். தொழிலாளர்கள். குடும்பத் தலைவர்கள். ஆகவே எத்தகைய சமூகம் என்பதும் குழந்தைப் பருவத்தில் எத்தகைய பயிற்சி என்பதைப் பொறுத்துள்ளது. அவைகளுக்கென இலக்கியம் படைப்பதென்பதும் இத்தகைய நோக்கத்துக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

# மீன்பாடும் தேனாடு எங்கள் நாடே!

- மட்டுநகர் முத்தழகு

## மட்டக்களப்பும் அதன் மாண்புகளும்

இழக்கு மாகாணத்தின் தலைநகராகத் திகழ்வதுதான் மட்டக்களப்பு. வடக்கே வாகரை எனும் ஊர் தொடங்கி தெற்கே பொத்துவில் பாணமை வரை நீண்ட நிலப் பரப்பையும், கிழக்கே கடலையும், மேற்கே அடர்ந்த காடுகளையும் கொண்டதுதான் இந்த மட்டக்களப்பு.

இங்கே கடலுமுண்டு, மணலுமுண்டு, கள்ளுமுண்டு. கணக்கிலாத் திரவியக் காடுகளுமுண்டு. வளம் கொழிக்கும் வயல்களும் வாவியும் உண்டு. தென்னை, பனை, கமுகு மர இனமும், தேமா, பலா, வாழை எனும் முக்கனிகளை வழங்கும் தருக்களும் உண்டு. வெற்றிலையும், வெண்சுண்ணமும் இங்கே கிடைக்கின்றன. பால் தரும் கால் நடைகளும் தேன் ஒழுகும் மரங்களும் இங்குண்டு. வாவிகளில் மீன் பாயும், காடுகளில் மானும் பாயும். இங்கே இந்துக்களும், முஸ்லீம்களும், கிறீஸ்தவர்களும், பௌத்தர்களும் வாழ்கிறார்கள்.

தமிழும், ஆங்கிலமும், சிங்களமும், போர்த்துக்கீசியமும், அரபு மொழிகளும் பேசுபவர்கள் இருக்கிறார்கள்.

இதுதான் 'கிழக்கிலங்கை'. இதன் தலைநகரம்தான் மட்டக்களப்பு. மட்டு மாநகரின் பெயர்ச் சிறப்பும், எழிலும் மட்டு என்னும் சொல் தேனைக் குறிக்கும். தேன் கூடுகள் நிறைந்து அத்தேன் கூடுகளிலிருந்து தேன் ஒழுகிக் கொண்டிருக்கும் இடமென்றே பொருளைத்தரும்.

''களப்பு'' என்பது ஆழம் குறைந்த நீர்ப் பரப்பைக் குறிக்கும். ஆழங்குறைந்த நீர்ப் பரப்பு மட்டக்களப்பு வாவியாகும்.

மட்டு (தேனொழுகும் நிலப்பகுதியையும்) ஆழம் குறைந்த நீர்ப்பரப்பையும் (வாவியையும்) உள்ளடக்கிய பகுதி மட்டக்களப்பு எனப்படும் மும்வளமும் பொருந்திய தேன் நாடு.

அடுத்து மட்டு+கலப்பு—(மட்டு—தேன் + கலப்பு) தேனொழுகி நிலத்துடன் கலந்தபகுதி என்றும் பொருள்படும். மட்டுக் கலப்பு — மட்டுக்களப்பு என ''ல'' கரம் ''ள'' கரமாகத்திலிருந்து வழக்கில் வந்திருக்கலாம். களம்- என்பது நெற்பயிரை அறுத்துக் குவித்து வைக்கோல் வேறாகவும்-நெல்வேறாகவும் பிரிக்கும் இடத்தைக் குறிப்பதாகும் இச்சொல் மட்டு என்ற சொல்லுடன் சேர்ந்து மட்டக்களப்பு என்ற பெயர் தோன்றியிருக்கலாம்.

களம் - என்பது வீரர்கள் விளையாடும் இடத்தைக் குறிக்கும் கொம்பு விளையாட்டின் களமாகவும், வீரமிக்க மெய்வல்லுனர் விளையாடும் களமாகவும் விளங்கியிருக்கலாம். இதற்குச் சான்றாக இங்கு கொம்பு விளையாட்டும் - அத்துடன் மல்லர்கள் தம் உடல் வலுவைக் காட்டும் வீரர்கள் அன்றுதொட்டு இன்றுவரை வாழ்ந்து வருவதுமாகும் இப்பகுதியில் மல்வீரர் (சாண்டோ) சங்கரதாசின் பாரம்பரியமொன்று அவருக்கு முன்னரும். பின்னரும் வாழ்ந்து கொண்டாடி இருந்ததையும் வாழ்ந்து. கொண்டு வருவதையும் இங்குள்ள பலர் நன்கறிவர். சாண்டோ சங்கரதாஸ் அவர்கள் கிழக்காசியாவில் உடல் வலிமையைக் காட்டும் சாகஸ விளையாட்டுக்களால் இரும்பரசன் என்ற மாபெரும் புகழால் இலங்கைக்கும் குறிப்பாக கிழக்கிலங்கைக்கும் சிறப்பாக மட்டு மாநகருக்கும் பெரும் சிறப்பைத் தேடித்தந்தவர். இவரின் வாரிசுகளான சாண்டோ தியாகராஜாவும், சாண்டோ சின்னத்துரையும் சாண்டோ ஐயாத்துரையும், சாண்டோ குணரெத்தினமும், சாண்டோ ராஜா மத்தியான், சாண்டோ சிறிதாஸ், ஊறணி கே. எஸ். குணரெத்தினம், மாணிக்கம், கீர்த்தி சிங்கம், ஆரையம்பதியைச் சேர்ந்த இரும்பு வீரன் என்று அழைக்கப்படும் ஐ. சிவானந்தராஜா, அந்தோனிமுத்து இவரின் முக்கிய வாரிசுகளாகவே விளங்கிக் கொண்டிருக்கின்றனர் எனவே மட்டு (தேன்) ஒழுகும் வீரர் விளையாடும் களமுடையஇடமெனவும் பெயர் பெறும்.

## மட்டு (க்) களப்பு

நீரும், சேறும் கலந்து இருந்த இடங்களிலே காற்றின் சுழற்சி காரணமாக இவ்விடங்கள் திட்டுத்திட்டாக அமைந்திருந்த காரணத்தால் மட்டமாக வெட்டிச் சயப்படுத்திய காரணத்தால் மட்டக்களப்புஎன்றுங் கூறுவார்கள்.

மட்டு - என்பது சேறு, மட்டக்களப்பைச் சுற்றி எல்லா இடங்களிலும் சேறு இல்லை. சேறு என்பது செழிப்பு என்னும் உயர்ந்த சொல். அவ்வூரின் முன்னேற்றத்தைத் தொட்டுக்காட்டும் சொல். மட்டு என்பதோடு (ம்) இணைந்தால் மட்டும் (முடிவு) முடிவைக் காட்டும் எல்லையைக்குறிக்கும் சொல்லாகவே அமைகின்றது; எனவே மட்டு (தேனொழுகும்) செழிப்புமிக்க நிலமுடைய இடம் எனவும் பெயர் பெறும்.

## மட்டு

மட்டு - சூரியன் சிரிக்கும் முகம் கிழக்கே அமைந்துள்ளதனால் கிழக்கு மாகாணம் என்றும் அதற்கு எல்லைக் கோடமைந்து எழுவான் கரை என்றும் (கரை) எல்லையைக் காட்டும் முடிவைக் கூறும் காரணப் பெயர் அதிலும் சிறப்புப் பெயரை ''கிழக்கு'' இதை முதன்மையாகப் பெற்று விளங்கும் தலைப் பட்டினம் மட்டக்களப்பு என்றும் கூறலாம்.

அக்காலத்தவர்கள் கால உணர்வுகளோடு உணர்த்தும் இப்பெயரினை அமைத்திருக்கலாம் உதாரணமாக வசந்த கால பட்சிகளான குயில்கள் கூவும் ஓசையையும், மாரி கால தவளை இனங்களின் தாளமும், பூச்சொரியுங் காலங்களில் தேன் பாடும் வண்டினம் பாடுவதால் எழுகின்ற ரீங்கார ஓசையும் உடைய அக்காலமே தேன் ஒழுகும் காலமாகும்.

இக்காலத்தில் குயில்களும், தவளைகளும் தேன் வண்டுகளும் பாடும் தாள ஓசைகளின் முடிவிலே (ம்) என்னும் ஓசையுடன் முடிவடைவதால் ''மட்டு'' என்பது குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் எல்லை வரைக்கும் என்னும் பொருளை வரையறுத்துக் காட்டுகின்றது.

## புளியன் தீவு

மட்டக்களப்பு நகரத்தில் புளியந்தீவு கோட்டைமுனை என்ற இரண்டு பிரிவுகள் காரணப் பெயர்களோடு அமைந்துள்ளன. இவ்விரு பகுதிகளையும் இணைக்கும் பாலமொன்று நகரத்தின் மத்தியில் இருப்பதனால் இதற்கு கோட்டைமுனைப் பாலம் என வழங்கப்படுகின்றது.

புளியன் என்று நினைக்கும் பொழுது தமிழர்களின் தெய்வமான முருகப்பெருமானை நினைக்கும் பொழுது அருணகிரி நாதரின் பாடலின் கருத்தினை நோக்குவோம்.

> வன மிகு வேடர்
> அருளிய பூசை மகிழ்வுறு
> கதிர் காமம் உறைவோனே

முருகக்கடவுளின் உறவினரான (மாமன்) புலிய மாறன் 12ம் நூற்றாண்டில் இம்மாநகரை ஆட்சிசெய்த காரணத்தால் புலியன் என்னும் சொல் சிதைவுற்று புலியந்தீவு எனப் பேசப்படலாகின. புலியந்தீவுப் பகுதி பள்ளப்பகுதியாகவும் கோட்டைமுனைப் பகுதி மேட்டுத் தன்மையுடனும் இருந்த காரணத்தினால் உயர்வான மேட்டுத்திடலில் இருந்து கச்சேரியைப் பார்க்கும் பொழுது கச்சேரி மறையப்பட்டு அதன் ''முனை'' மட்டுமே தெரிகின்ற காரணத்தினாலும் கோட்டைமுனை என்ற காரணப்பெயர் கூறியே இன்று அழைக்கப்படலாயின.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது போலவே புளியந்தீவுப் பக்கமிருந்து கோட்டைமுனைப் பாலத்தின் அழகுத்தோற்றத்தை சித்திரைப் பூரணை நாளில் மாலை நேரம் அவ்விடத்தில் நின்று பார்த்தால் கோட்டைமுனைப் பாலம் மாநகரத்தின் முகமாகவும், படுவானில் மறைகின்ற சூரியனும் எழுவானில் உதிக்கும் சந்திரனும் ஒன்றையொன்று பார்க்கும் அக்காட்சி மாநகரத்தின் முகமான கோட்டைமுனை பாலத்தின் இரு கண்களாகவே தோற்றமளிக்கும் காட்சியின் அழகுத் தோற்றம் கண்கொள்ளாக் காட்சியாவே இருக்கும்.

சூரியனால் இவ்வுலகம் ஆளப்படுகின்றது. அச்சூரியதேவன்'' குணகடல்'' என்னும் கிழக்

குத்திசையில் உதிக்கிறான். கிழக்கில் சூரியன் எழும் திசையை ''எழுவான்'' அல்லது ''எழுவான்கரை'' என்றும் அவன் மறையும் திசையை ''படுவான்'' அல்லது ''படுவான்கரை'' என்றும் மட்டக்களப்பு மாநில மக்கள் கூறி வருகிறார்கள்.

மட்டக்களப்பு என்றும், மட்டுநகர் என்றும் குறிப்பிடப்படும் மாநகர் மேற்கூறிய கிழக்குத்திசையின் நடுவினிலே எழுவானையும் படுவானையும் இணைத்தாற்போல் அழகுறக் கொலு வீற்றிருக்கிறது. மீன்கள் பாடும் மேன்மைமிகு வாவி இம்மாநகரை வலம்வந்து கடலோடு சங்கமிப்பது இயற்கை ஈந்த எழில் கொடையாகும்.

## பாடும் மீன்

மட்டக்களப்பில் அழகிய நீர் நிலையங்கள் உள்ளன. அவைகளிலே புளியந்தீவிற்கும், கல்லடிக்கும் இடையில் ஓடுகின்ற வாவியிலே குறிப்பாக கல்லடிப் பாலத்துக்கு அண்மையில் எழும் இனிய ஓசை உலக மக்களையே! பேராச்சரியத்திலாழ்த்திவிடுகிறது. இளவேனிற் காலத்திற் சித்திரைப் பூரணையிலும், வைகாசித் திங்களிலும் வாவி மிக அமைதியாக இருக்கும் காலங்களில் பாடும் மீனிசை கேட்கப் பலரும் விரும்புவார்கள். இவ்விரவு நேரத்தில் வாவியின் இயற்கையின் எழிலைப் பற்றிக் கூறுவதனால் வெண் நிலவின் ஒளி வாவியில் பட்டுத் தெறிப்பதைப் பார்ப்பவர்கள் வெள்ளி உருகிய வெள்ளம் வெளிப்பட்ட தேர் என வியப்புற்றுக் கூறுவார்கள்.

இதனையே காரைதீவினிலே பிறந்து கிழக்கு மாகாணம் ஒன்று இருக்கின்றது என்று தனது முத்தமிழ்த் திறத்தினால் உலகறியச் செய்து தமிழ் நாட்டிலே தனது 'யாழ்நூலை' அரங்கேற்றிய முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளார் தனது குறிப்புரையிலே ''விண்ணுலகினரும் மண்ணுலகிற்கு வர ஆசை கொள்ளும் பேரழகு வாய்ந்த வெண்ணிலவின் ஒளி மட்டக்களப்பு வாவிக்கும் அதனைச் சுற்றியுள்ள வயல்வெளிகளுக்கும், அழகுக்கு அழகூட்டும் பேரழகுக்குக் காட்சியோ கண்கொள்ளாக் காட்சியாகும் எனக் குறிப்பிடுகின்றார்.

## ஓம் ஒலியே

மீன் பாடுவதாகப் பலர் கூறியபோதிலும் முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளாரின் கருத்தின்படி மீன்பாடும் பாடல் நீரர மகளிரே என்றே கூறுகின்றார்.

ஆத்ம சிந்தனையுடன் நாம் அடிக்கடி அவ்விடத்துக்குச் சென்று மன அமைதிதேடும் தியானத்தில் அமர்ந்தால் அவ்வெளியின் தத்துவ ஓசையைக் கேட்டறிய முடியும். அதுவே உலகின் முதலொலியான ஓங்கார ஓசையாகவே கேட்கின்றது. இவ்விடத்தில் மட்டக்கப்பு மக்கள் வாய்களில் இருந்து ''ஆம்'' என்பதற்குப் பதிலாக 'ஓம், ஓம்' என்ற சொல் உரையாடலின் போது வெளிப்படுவதும் குறிபிடத்தக்கதாகும். இவ்வொலியோடே இணைந்த மெல்லிய இசையான ''ஸரிகம பதநிச'' என்னும் சுரவரிசை நீரர மகளிரின் வீணையுள் புகுந்த இராகம் என அடிகளார் குறிப்பிடுகிறார். அத்துடன் முகரியாழ், சுருதிவீணை, பாரிசாதவீணை, சதுர்தண்டி வீணை எனும் இசைக்கருவிகளோடு இணைந்த சங்கராபரண இராகம் என்றும் விளக்குகின்றார்.

## கூத்தும், குரவையும்

நாட்டுக் கூத்துக்கள் மட்டக்களப்பு மக்களின் பாரம்பரியச் சொத்து. வடமோடி, தென்மோடி நாடகங்கள் மற்றும் வசந்தன், கும்மி, குரவை போன்ற ஆடல் பாடல்களுடன் கொம்பு விளையாட்டுக்களும் இந்நாட்டு மக்களின் கேளிக்கையாகவும், விழாக்களுக்கு உரியனவாகவும் பொழுதுபோக்கிற்கு உரியனவாகவும் இருந்து வருகின்றன.

இயற்கையின் எழில் சிறப்பும் அச்சிறப்பில் மலர்ந்த கூத்து, குரவை, கும்மி, கோலாட்டம், கொம்படித்தல், பள்ளிப்படிப் பறியார் பாடிமகிழும் குயிலொலியை ஒத்த நாட்டுப் பாடல்கள் போன்ற மகிழ்ச்சியூட்டும் புகழ்ச்சிக்குரிய நிகழ்ச்சிகளாலும் அணி செய்யப்பெற்று அழகின் இருப்பிடமாக விளங்கும் நாடு மட்டக்களப்பு.

மாநிலமும் அதன் தலை நகராம் மட்டுமாநகரு மாறு மென்பது மிகைப்படக் கூறும் உரையாகாது.

# என்ன நடந்தது இங்கே ஏன் இந்த மாறுதல்கள்?

— திமிலை மகாலிங்கம்

சோலை யெனவளர்ந்து
தோப்பென்று பேரெடுத்த
தென்னை மரமெங்கே?
சிறகடித்து வானகத்தே
பறக்கும் பறவையெனப்
பரவினின்ற கிளையெங்கே?
பார்த்தால் விழிநிறைந்த
பச்சைநிறம் சூரியனை
காணா நிழல் ஒதுக்கு
கலகலத்த ஓசைதனை
ஆக்கி யசைந்தோடும்
ஆரல் பனையேறி
மீனெல்லாம் ஓடும்
விளைச்சல் நிலமெங்கே?

என்ன நடந்ததிங்கே
ஏனிந்த மாறுதல்கள்?
சொன்னால் புரியுமட்டும்
சொல்வதற்கு யாருமில்லை,

முந்திரிகை காட்டி
முந்திவரச் சொல்லிநிற்கும்
கீச்சென் றொலிக்கும்
கிளிக்கூட்டம் ''பாராதே
போ'' வென்றுகூறும்
புடலைக் கொடிமேலே
காற்றில் அசையும்
கதையோசை கேளாமல்
உள்ளே பதுங்கி
உடன் பழத்தை வாய்வழிய
கள்ளத்தனமாகக்
கடிக்கும் பொடியன்கள்
பதுங்குவதைப் பார்த்தும்
பாராமல் செல்லுகின்ற

மூத்த மனிதர்களை
முழுமையாய்க் காணவில்லை
எங்கே மறைந்தார்கள்
இடம்காலி ஆனதென்ன?
கூடுபோல் வீட்டில்
குளித்து உடை உடுத்தி
தேடும் இருவிழிகள்
தேட உடையவனை
நாடுவான் வீடென்று
நல்லிதயம் சொல்வதனால்
வழிபார்த்து மேலே
விழிவைத்துக் கேள்வியெனும்
குறிநெற்றி மீதே
கோடாய் விழநிற்கும்
நங்கைய ரெங்கே?
நாடாத பேர்வந்தால்
வள்ளென்று பாயும்
வமிசத்து நாயெங்கே?
எங்கே இருப்பிடங்கள்?
எருக்கு முளைத்து விடக்
காடாய்த் தெரிகிறது
கண்கள் பிழைத்தனவா?

என்ன நடந்ததிங்கே
ஏனிந்த மாறுதல்கள்?
சொன்னால் புரியுமட்டும்
சொல்வதற்கு யாருமில்லை.

வீதிக ளெல்லாம்
வெறிச்சோடிக் கானகத்தே
ஊருவது போல
உணர்வு வருகிறது.
ஊராது நின்று வந்த
உயிரின் பசிபோக்கி
ஆதரவு செய்த
அந்தக் குடும்பமெங்கே?
கண்ணகி யம்மன்
கலியாணக்கால் சடங்கில்
முன்னின்று உடுக்கடித்து
முணுமுணுத்துக் காவியத்தை
பாடியொரு கன்னத்தில்
பதுக்குகின்ற வெற்றிலையைக்
குதப்புகின்ற சின்னக்
குடும்பி மனிதரெங்கே?

என்ன நடந்த திங்கே
ஏன் இந்த மாற்றங்கள்?
சொன்னால் புரியுமட்டும்
சொல்வதற்கு யாருமில்லை!

வீடுகளின் கூரை
மேலே பறந்தனவா?
புள்ளிபுள்ளியாய்ச் சுவரில்
பொத்தல் தெரிகிறது
அம்மை வடுவென்றால்
ஆளில்மட்டுமே தெரியும்
நம் வாழ்வில் காணாத
நவமாம் அடையாளம்
ஊமைபோல் சும்மா
உருவங் நகருகின்ற
வாழ்வு பழகியதால்
வாயடைத்துப் போனதுவோ!

என்ன நடந்ததிங்கே
ஏனிந்த மாறுதல்கள்?
சொன்னால் புரியுமட்டும்
சொல்வதற்கு யாருமில்லை!

தென்னை மரமெல்லாம்
தெறித்து விழுந்தனவா?
கன்னிநா கெல்லாம்
கன்று விடமாட்டாமல்
செத்து மடிந்தனவா
தெருவில் உயரமென்ன
பத்து வருடங்கள்
பறந்தோடி விட்டபின்பு
இன்றுதான் வந்தேன்
இருந்து வெளிநாட்டில்
அப்பா பெரியப்பா
அதற்கிளைய தம்பியப்பா
தங்கை ஒருவரையும்
தான் காண மாட்டாமல்
திக்குமுக் காடித்
திகைக்கின்றேன் கூறிடுவீர்

என்ன நடந்ததிங்கே
ஏனிந்த மாறுதல்கள்
சொன்னால் தெரியுமட்டும்
சொல்வதற்கு யாருமில்லை!

# மட்டக்களப்பில் நவீன நாடகங்கள் - ஒரு நோக்கு

வெ. தவராஜா

நவீன நாடகம் என்பது நாம் இதுவரை பேணி வருகின்ற மரபு வழி நாடக முறையிலிருந்து வேறுபடுபவை. நாட்டுக் கூத்து, மகுடிக்கூத்து, கரகம், கோலாட்டம், வசந்தன், பறைமேளக் கூத்து.... போன்ற ஆட்டமும், பாட்டும் நிறைந்த நாடகங்களே மரபு வழி நாடகங்களாகும். இவை அனேகமான திறந்த அரங்கிலே ஆடப்படும். ஆனால் இம்மரபு வழி நாடகங்கள் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களது வருகையுடன் மூன்று பக்கமும் அடைக்கப்பட்ட படச்சட்ட மேடையிலும் (Picture Framing Theatre) காட்டப்பட்டு வருகிறது. இன்று பாடசாலைகளிலும் இத்தகைய மரபு வழி நாடகங்கள் இத்தகைய மேடைகளிலேயே இடம் பெறுகிறது.

நவீன நாடகங்கள் என்று நாம் குறிப்பிடுகின்ற நாடகங்கள் உரையாடலுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு நடிக்கப்படும் நாடகங்களாகும். இவை ஆரம்பத்திலேயே படச்சட்ட மேடையிலேயே காட்டப்பட்டது. இந்நிலை தொடர்ந்தாலும் இன்று வீதி நாடகங்கள், பரிசோதனை நாடகங்கள் இம்மேடையிலிருந்து இறங்கி பார்வையாளர் மத்தியில் காட்டப்படுகின்றன.

இத்தகைய நவீன நாடகங்களை அவற்றின் தன்மை அடிப்படையில் இரண்டாக நோக்கலாம்.

1) ஜனரஞ்சகமான நாடகங்கள் (Popular Theatre)

2) காத்திரமான நாடகங்கள் (Serious Theatre)

இந்த நாடகங்கள் இவற்றின் அளிப்பு முறையிலும் இரண்டு மாதிரியாக அமைந்துள்ளது.

1) யதார்த்தப் பண்பு நாடகங்கள் (Realistic Play)

2) மோடி நாடகங்கள் (Stylized Play)

இன்றைய நவீன நாடக வளர்ச்சி காத்திரமான நவீன நாடகங்களை மோடி நாட்கப் பாணியில் வழங்குவதையே அடிப்படையாகக் கொண்டு அதிலிருந்து மேலும் தேடல்களை ஆரம்பித்து சமூகத்திற்கான அரங்காக மாற்றமடைந்து வருகிறது. ஈழத்தில் வடபகுதியில் இன்று நவீன நாடகத்தில் அதன் மிக தேடல் விரைவின்றி செல்லுவதை அவதானிக்கலாம். மண்சுமந்த மேனியர் தொடங்கி உயிர்த்த மனிதர்களின் கூத்து வரையான நாடகங்களும் அதற்குச் சான்றாக அமையும். இத்தகைய மாற்றத்திற்கு ந. சுந்தரலிங்கம், தாசீசியஸ், குழந்தை சண்முகலிங்கம், கலாநிதி சி. மௌனகுரு, சிதம்பரநாதன் போன்றோரின் பங்கு மிகவும் காத்திரமானது. மட்டக்களப்பிலும் நவீன நாடகங்கள் சமகாலப் பகுதியில் மேடை ஏற்றப்பட்டது. ஆனால் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை ஒரு சில நாடகங்கள் தவிர ஏனையவை நாடக இலக்கியத்துடனான தேடலுக்கு எதுவிதத்திலும் பொருத்தப் பாடுடையதாகவே இல்லை என்பதை குறிப்பிட்டே ஆகவேண்டும்.

மட்டக்களப்பில் பயில் நிலையிலுள்ள நவீன நாடகங்கள் அனேகமாக ஜனரஞ்சகமானதாகவும், அளிப்பு நிலையில் யதார்த்த பண்பு நிறைந்ததாகவுமே உள்ளது. இந்த நாடகங்களில் பின்வருணவற்றை எதிர்பார்க்கலாம்.

1) சினிமாப்பாணில் அமைந்த உரையாடல், நடிப்பு, ஒப்பனை.

2) கதாநாயகமுக்கியத்துவம் - Heroism

3) திரைபிடப்பட்ட மேடை முக்கியமாக இருத்தல்.

4) சிரிக்க வைப்பதை நோக்கமாகக் கொண்டிருத்தல்.

இந்த அம்சங்களுக்கே முக்கியத்துவ கொடுத்து நடிக்கப்படுவதால் நாடகங்களின் பாணியை அவை வழங்குவதில்லை. பொழுது போக்காகவே நாடகங்கள் காட்டப்படுகின்

றது எனும் கருத்து நாடக நடிகர், நெறியாளர், பார்வையாளர் மத்தியில் நிலவுகிறறது. இத்தகைய நிலையில் நாடகங்கள் உள்ளமைக்கு பின்வரும் காரணங்களை எடுத்துக் கூறலாம்.

1) மூன்றாம் தர இந்திய சினிமாவினுடைய தாக்கம்.

2) நவீன நாடகம் முனைப்படைந்த காலப் பகுதியில் (1970ன் பின் மட்டக்களப்பில் அதுபற்றிய விழிப்புணர்வு இல்லாதிருந்தமை.

3) நாடகமும் பயிலப்படவேண்டிய, பயிற்சிக்கு உட்படவேண்டிய கலை என்பதை புரிந்து கொள்ளாமையும், வாய்ப்பின்மையும்.

4) அரசியல் காரணிகள்:


இந்த நிலையில் தான் எமது பிரதேச நவீன நாடகங்கள் இன்றுவரை காணப்பட்டு வருகிறது.

1980 வரை ஒரு சில நல்ல நாடகங்கள் இடைக்கிடையே மேடை ஏற்றப்பட்டாலும் அதன் பின்னர் அத்தகைய நாடக முயற்சிகளும் கைவிடப்பட்டதால் நாடகத்தின் போக்கு மந்தமாகவே அமைந்துள்ளது.

அண்மைக் காலத்தில் நாடகமுயற்சிகள் சற்று மாற்றத்திற்குள்ளாகி இருப்பதனை அவதானிக்கலாம். இந்த நிலை தொடருமானால் எதிர் காலத்திலாவது சமூகமாற்றத்திற்கான அரங்கு ஒன்றை மட்டக்களப்பிலும் ஏற்படுத்தமுடியும். இதற்கு நாடகத்தில் ஆர்வம் கொண்ட, பங்குபற்றுகின்ற, பயிற்சி பெற்ற ஆர்வலர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நாடத்தின் சமூகப்பணியை உணர்ந்து செயற்படுவது முக்கிய கடமையாகும். எல்லாவளங்களும் மட்டக்பளப்பிலும் உள்ள நிலையில் எமக்கு என்று ஒரு அரங்கை எம்மால் ஏற்படுத்த முடியும்.

## இலச்சினை வடிவமைத்தல், வாசகம் எழுதற் போட்டி முடிவுகள்

இலச்சினை வரைந்து முதல் பரிசு பெறுபவர்



**டாக்டர். எஸ். வேலாயுதபிள்ளை**
புதிய கல்முனை வீதி, கல்லடி, மட்டக்களப்பு.

(பரிசு பெற்ற இலச்சினையை முதற்பக்கத்தில் காணலாம்)

வாசகம் எழுதி முதற்பரிசு பெறுபவர்



**செல்வி. எஸ். தட்சணகௌரி**
(திமிலைதீவைச் சேர்ந்த மாணவி)
மட்/ஆனைப்பந்தி இ. கி. மி.
பெ. ம. வித்தியாலயம்

பரிசு பெற்ற வாசகம்: மண்ணில் எம் கலைகளை கண்ணென மதிப்போம்.

# நன்றிகள் நவில்கிறோம் ..................

★ ஆசிச்செய்திகள் வழங்கிய இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஜீவனானந்தா, ஆயர் வண கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, மட்டக் களப்பு பெரியபள்ளி வாசல் மௌலவி எம். எச். எம். புஹாரி (பலாஹீ) ஆகியோருக்கும் ஆளுநர் லெப். ஜெனரல் நளின் செனிவரத்தின, பிரதம செயலாளர் திரு. சொ. கணேசநாதன், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஜனாப். எம். ஏ. சி. காதர் முகைதீன், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் திரு. அ. கி. பத்மநாதன் ஆகியோருக்கும்,

★ மலரிற்கு ஆக்கங்கள் தந்துதவிய அறிஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர் களுக்கும்,

★ மலர் வெளியிடுவதற்கு உறுதுணையாக எமக்கு விளம்பரங்கள் தந்துதவிய வர்த்தகப் பெருமக்களுக்கும்,

★ அட்டைப்படத்தை அழகுற வரைந்துதவிய ஓவியர் பவான் அவர்களுக்கும்,

★ பல வழிகளிலும் ஆலோசனைகள், உதவிகள் வழங்கி வழிகாட்டிய மண் முனை வடக்கு பிரதேச செயலாளர் மற்றும் உதவிச் செயலாளர்கள் ஊழியர்களுக்கும்,

★ முத்தமிழ் விழாவிற்கு பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்ட வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் க. தியாகராசா, மட்டக்களப்பு பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் க. முத்துலிங்கம் ஆகியோருக்கும்,

★ விழாவின் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பித்த அறிஞர் பெருமக்களுக்கும், பாடசாலைகளுக்கும்,

★ மலர்வெளியீட்டின் பின்னணியில் நின்று உழைத்த கலாசாரப் பேரவை உறுப்பினர்களான ஐ. நடேசன், கவிஞர் செ. குணரத்தினம், அ. இருதய நாதன், செல்வி ஐ. யூ. கபீபா ஆகியோருக்கும்,

★ முத்தமிழ் விழா மலரினை அழகுறச்செம்மையாக அச்சிட்டு உதவிய புனித செபத்தியார் அச்சகத்தினருக்கும்,

★ பல வழிகளிலும் ஆக்கமும், ஊக்கமும் அளித்து முத்தமிழ் விழா சிறக்க உதவிக்கரம் நல்கிய அனைவருக்கும்,

**நன்றிகள்!** **நன்றிகள்!!** **நன்றிகள்!!!**

கலாசாரப் பேரவை.

மட்டக்களப்பில் ... ... ...

* முதல் தரமான வீடியோ கசட்டுக்களை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளவும்,
* சிறந்த தொழில் நுட்ப முறையில் பதிவுசெய்து கொள்ளவும்,
* உங்கள் இரசனைக்கேற்ப தமிழில் புதிய, பழைய பாடல்களை டிஸ் ஸ்ரீறியோ முறையிலும்,
* பிறமொழிப் பாடல்களையும், சிறந்த ஓடியோ முறையில் பதிவு செய்யவும்

நாடவேண்டிய ஒரே இடம்


# நியூ ஈஸ்ரன் வீடியோ அன்ட் ஓடியோ சென்ரர்

89, பிரதான வீதி - மட்டக்களப்பு.

---

நவீன டிசைன் நகைகளுக்கு

நங்கையர்கள் நம்பிக்கையுடன் நாடும் இடம்



# சுபாஜினி ஜுவலர்ஸ்

**51, பிரதான வீதி - மட்டக்களப்பு.**

# KAY - VE - ESE HOUSING AND CONSTRUTION COMPANY (Private) Ltd.

**(REGISTERED IN SRI LANKA)**

*CEMENT BASED INDUSTRIALIST*
*GOVT. REGISTERED BUILDING CONTRACTORS*
*LAND FOR SMALL HOUSING SCHEME*

## 'KAY - VE - ESE'

**37, BAR ROAD, BATTICALOA:**

*065 - 2763*

கம்பஸ் மரம், இரும்பு, யானை மார்க் அஸ்பஸ்ரஸ்
இரும்பு கிறில், கேற், றஸ் போன்ற

**கட்டிடப் பொருட்கள்**
**நிதான விலையில் கிடைக்கும்.**

**சிறிய வீட்டுத் திட்டங்களுக்கான**
**குடியிருப்பு நில விற்பனையாளர்கள்.**

**வீடு அமைப்பவர்கள் எம்மிடம்**
**விசாரணை செய்யத் தவறாதீர்கள்.**

37, பார் வீதி, மட்டக்களப்பு.

# ஜேசு ரவல்ஸ்
# (JESU TRAVELS)

மட்டக்களப்பு - கொழும்பு

காலை, மாலை, இரவு பஸ் சேவை

★ கட்டணம் ரூபா 80/- மட்டுமே

மட்டக்களப்பில் ஆசனங்களைப் பதிவு செய்ய;

## தயா மோட்டஸ்

276A, திருமலை வீதி, மட்டுநகர்

065 / 2030, 065 / 2156,

கொழும்பில் ஆசனங்களைப் பதிவு செய்ய,

## HOTEL SOUTH ASIA

8, கீர்த்தி ஒழுங்கை, 105, ஒல்கொட் மாவத்தை

கொழும்பு - 11 01 / 423312

---

# நர்மா பைவர் இண்டஸ்றீஸ்

14, ஸ்ரீ சித்திவினாயகர் றோட்

கல்லடி, மட்டக்களப்பு.

*065 - 2155*

*கடற்றொழில் நீரியில் வளத்துறைத் திணைக்களத்தினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட இண்டஸ்றீஸ்*

கண்ணாடியிழையிலான வாவி - கடல் தோணிகள்


கண்ணாடியிழையிலான தளபாடங்கள்

கண்ணாடியிழையிலான நீர்த்தொட்டிகள்

*போன்ற கண்ணாடியிழையினாலான பொருட்கள், உபகரணங்கள் தயாரித்து வழங்கப்படும்.*

அழகிற் சிறந்த பவுண் தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்!

உத்தரவாதத்துடன் ஓடர் நகைகள் செய்து தரப்படும்.




# உதயா நகை மாளிகை

39, பிரதான வீதி - மட்டக்களப்பு.

065 - 2619.

---

எண்ணம்போல எழில் மிகு தங்க நகைகளுக்கு
என்றும் நாடவேண்டிய எழிலகம்!



# மைதிலி ஜுவலரி

39, முனை வீதி - மட்டக்களப்பு.

*065 - 2947.*

காலத்திற்கேற்ற கவர்ச்சி மிகு நகைகளுக்கு
கன்னியர்கள் நாடுமிடம்

குறித்த தவணையில் மாற்றுத் தவணையின்றி

கைதேர்ந்த வேலைப்பாடுகளுடன்

22 கரட் தங்க நகைகளுக்கு நம்பிக்கையுடன் நாடுங்கள்

# ரவி ஜுவல்லரி

## 69, பிரதான வீதி - மட்டக்களப்பு.

---

நாகரிக நங்கையர் நவீன டிசைன் நகைகளுக்கு
நம்பிக்கையுடன் நாடும் நகை மாளிகை

22 கரட் உத்தரவாதத்துடன் குறித்த நேரத்தில்
ஓடர் நகைகள் செய்து தரப்படும்.

# நியூ புஷ்பா

37, இரண்டாம் குறுக்குத் தெரு,
**மட்டக்களப்பு.**

மட்டக்களப்பில் மனங்கவர் நகை மாளிகை

அழகிற் சிறந்த பவுண், தங்க நகைகளுக்கு நம்பிக்கையான இடம்

- ✷ பழைய தங்கம், பொன், வெள்ளி நியாய விலைக்கு வாங்கப்படும்.
- ✷ அடகுவைத்த நகைகள் மீட்டு நியாய விலைக்கு வாங்கப்படும்.



# சாந்தி ஜுவலரி

## 57, பிரதான வீதி - மட்டக்களப்பு.

---

உயர்ரக ஜவுளி வகைகளுக்கு

மட்டுநகரில் மனங்கவர் ஸ்தாபனம்

# நியூ மர்ழியாஸ்

## 44, பிரதான வீதி, - மட்டக்களப்பு.

☎ 065 - 2900.

நகையென்றதும் நம்பிக்கையுடன்
நாடவேண்டிய இடம்
சுசீலா ஆபரண நிலையம்

உத்தரவாதமிக்க 22 கரட்டில் உரிய நேரத்தில்
நகைகள் செய்து தரப்படும்.



## சுசீலா ஆபரண நிலையம்

17, பிரதான வீதி - மட்டக்களப்பு.

☎ 065 - 2519

---

எண்ணம்போல வண்ணப் புகைப்படங்களுக்கு
என்றும் நாடவேண்டிய ஸ்தாபனம்

★ அடையாள அட்டை, கடவுச்சீட்டு புகைப்படங்கள்
துரித கெதியில் வழங்கப்படும்.

# NEW BATTICALOA PHOTOS

59, பிரதான வீதி, மட்டக்களப்பு.

இனங்களுக்கிடையே ஒற்றுமைக்கும் சமாதானத்திற்கும்
பிரார்த்திக்கிறோம்

# சிஹான்ஸ்


## 8, பிரதான வீதி - மட்டக்களப்பு.

---

அழகிற் சிறந்த பவுண் தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்

நம்பிக்கை ! நாணயம் !! நேர்மை !!!

இன்றே நாடுங்கள்



# அருணா ஜுவலரி

**32, பிரதான வீதி - மட்டக்களப்பு.**

(ஓடர் நகைகள் குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன்
செய்து தரப்படும்)

ஒரே கூரையின் கீழ் உங்கள் மளிகைப் பொருள்களைப் பெற
ஓடி நாடுங்கள்

# சண்முகா ஏஜன்சி

**159, திருமலை வீதி - மட்டக்களப்பு.**

☎ **065 - 2139.**

---

உங்கள் தங்க நகைத் தேவைகளை
உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள உரிமையுடன் நாடுங்கள்

நம்பிக்கை · நாணயம் · நேர்மை

இதுவே எம் தாரக மந்திரம்

*உரிய காலத்தில் 22 கரட் உத்தரவாதத்துடன்
ஓடர் நகைகளைப் பெற நம்பி நாடுங்கள்.*



# ஆர்த்தி ஜுவலர்ஸ்

**22, பிரதான வீதி - மட்டக்களப்பு.**

☎ 065 - 2305.

With Best Compliments
from

# A. V. S. & CO. (PVT) LTD.

42, Lake Road No. 2
BATTICALOA,

*DISTRIBUTORS FOR AGRO CHEMICALS & FERTILIZERS*
*DEALERS FOR CEYLON GRAIN ELEVATORS LTD. &*
*COLOMBO GAS COMPANY LTD.*

| | Cylender Deposit Rs. | L. P. Gas Rs. |
|---|---|---|
| 2.4 Kg. | 1000/ | 65/- |
| 13 Kg. | 1500/- | 290/- |
| 40 Kg. | 2500/- | 930/- |

**REGULATOR — Rs. 350/-**

**RUBBERHOSE & CLIPS—Rs. 85/-**

**BURNER GAS COOKER WITH AUTO IGNITION—Rs. 3125/-**

**HOME DELIVERY ACCEPTED.**

65, Trinco Road,
Batticaloa.

TEL : 065 - 2643 / 2743.

மட்டக்களப்பு மாவட்ட மக்களுக்கு ……

# மட்டக்களப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

வ ழ ங் கு ம்

# உன்னத சேவைகள்

★ குறைந்த விலை,
★ தரமான பொருட்கள்,
★ பக்கட்டில் அடைத்த பொருட்கள்,
★ சுயமான விற்பனைத் தெரிவு,
★ ஒரே இடத்தில் உங்கள் தேவைகளை நிறைவு செய்ய,

நா டு ங் க ள் ……

## "சுயசேவை விற்பனை நிலையம்"

## "SELF SERVICE SALES CENTRE"

*சமையல் பிரச்சனையில் உங்களுக்கு உதவ*
L .P. GAS *விற்பனையும் நடைபெறுகின்றது.*

**L. P. GAS 13 KG - 290/-**

*வெற்றுச் சிலிண்டர் வைப்புப்பணம்* - **1500/-**

எமது சொகுசு பஸ் சேவைகள் பின்வரும் அட்டவணைப்படி நடைபெறும்.

மட்டக்களப்பு — கொழும்பு — தினமும் காலை 8-00 மணி
கொழும்பு — மட்டக்களப்பு — தினமும் காலை 6-30 மணி

ஒரு வழிக் கட்டணம்: ரூபா **80/-**

மட்டக்களப்பு — திருகோணமலை - ஞாயிறு, வியாழன் காலை 8-00 மணி
திருகோணமலை — மட்டக்களப்பு — திங்கள், வெள்ளி காலை 8-00 மணி

ஒரு வழிக் கட்டணம்: ரூபா **60/-**

# மட்டக்களப்பு ப. நோ. கூ. சங்கம்

**105, திருமலை வீதி, மட்டக்களப்பு.**

**☎ 065 · 2111.**

*St. Sebastian Printers, Batticaloa.*